366

கதர் மலர்

மலர் 5 | அகில பாரத சர்க்கா சங்கம் வெளியிடும் மாதப் பத்திரிகை | இதழ் 4

ஜனவரி 1952

ஸர்வோதய மாத இதழ்

வருட சந்தா ரூ 3 | ஸர்வோதய பிரசுராலயம் (A. I. S. A.,) வீரபாண்டி, திருப்பூர் | விலை அணா 6

கதர் மலர்

ஜனவரி 1952 தொடர் நெ. 52

★ பொருளடக்கம் ★

ஸர்வோதய மார்க்கம்
— காந்திஜீ

ஸர்வோதய தினம்
— வினோபாஜீ

ஜனவரி 30-உ
— மஜூம்தார்

ஸர்வோதய மேளா:

ராமராஜ்யத்தின் லட்சணங்கள்:

ஸர்வோதயத்தின் அஸ்திவாரம்:

பூமிதான யக்ஞம்:
— வினோபா

வாழ்க்கையின் சாதனம் ராட்டை
— காந்திஜீ

வர்க்கபேதமற்ற சமுதாயம்
— மஜூம்தார்

கல்வி உலகில் புத்துணர்ச்சி:

காந்தியும் மார்க்ஸூம்:
— வினோபா

வர்தா
— சத்தியன்

கிராமத்திற்கு ஒரு கோகுலம்
— வினோபா

உணவுப் பெருக்கமும் மக்கட் பெருக்கமும்
— கலேல்கர்

ஸர்வோதய சமாஜத்தின் உண்மைப் பொருள்:

நூல் காணிக்கை மூலம் வாக்காளர்:
— வினோபா

பாப்பாவின் காந்தி

நூற்புடன் நெசவையும் இணைக்க
— கிருஷ்ணதாஸ் காந்தி

சர்வ சேவா சங்கத்தின் தீர்மானங்கள்

பணம் செலவிட மூன்று வழிகள்
— வினோபா

ஸர்வோதய யாத்திரை

டாக்டர் குமரப்பா

மில் பகிஷ்கார சங்கற்பம்

கதர் தீபாவளி விற்பனை

ஸர்வோதய சமாஜம்
— யோகி சுத்தானந்த பாரதியார்

திக்கற்றவருக்கு தெய்வமே துணை

மகாத்மா காந்தி

இந்தியா முழுதிலும் உள்ள மாணவர்களுடன் கடிதப் போக்குவரத்து நடத்தி வந்ததிலிருந்து வண்டி வண்டியான புஸ்தகங்களில் உள்ள விஷயங்களைத் தங்கள் மூளையில் திணித்துக்கொண்டதனால் அவர்கள் எவ்வளவு பாழாகிவிட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். சிலர் புத்தி நிதானத்தை இழந்துவிட, சிலர் பைத்தியங்களாகவும், வேறு சிலர் புகலின்றி அசுத்த வாழ்க்கை நடத்திக் கொண்டும் இருக்கிறார்கள். எவ்வளவுதான் முயன்றாலும் எம்மால் தீமையை வெல்ல முடியவில்லை யாகையால் நாங்கள் இந்நிலையில் இருக்கிறோமென்று அவர்கள் சொல்லக் கேட்கும் பொழுது, எனக்கு அவர்களிடம் இரக்கம் உண்டாகிறது. "எங்களைப் பற்றிக்கொண்டுவிட்ட சைத்தான் தீமையை எப்படி அகற்றுவதென்று எடுத்துச்சொல்லுங்க"ளென அவர்கள் பரிதாபமாகக் கேட்கிறார்கள். நான் அவர்களுக்கு ராம நாமத்தைச் சொல்லுங்கள், கடவுள் முன் வணங்கி அவனுடைய உதவியைக் கோருங்கள் என்று சொல்லும்பொழுது அவர்கள் என்னிடம் வந்து, "கடவுள் எங்கே இருக்கிறாரென்று எங்களுக்குத் தெரியாதே, பிரார்த்தனையென்பதே என்னவென்று நாங்கள் அறியோமே" என்கிறார்கள். இவ்வளவு பரிதாபகரமான நிலைக்கு அவர்கள் வந்திருக்கிறார்கள்.

ஒரு தமிழ்ப் பழமொழி எப்பொழுதுமே என் நினைவில் இருந்து வந்திருக்கிறது. "திக்கற்றவருக்கு தெய்வமே துணை" என்பதே அந்தப் பழமொழி. நீ அவனிடம் உதவி கோருவதென்றால், உண்மை உருவில் கள்ளங் கபடமின்றி என்னைப்போன்ற இழிந்த மனிதனுக்கு அவன் எப்படி உதவுவானென்ற சந்தேகம் சிறிதுமின்றி அவனை அணுக வேண்டும். தன்னை அணுகிய கோடிக்கணக்கானவர்களுக்கு அபயமளித்துக் காத்தவன் உன்னைக் கைவிட்டு விடுவானா? அவன் பாரபக்ஷமெதுவும் காட்டுவதில்லையாகையால் உன்னுடைய வேண்டுகோள் எல்லாவற்றையும் அவன் நிறைவேற்றுவதைக் காண்பாய். கடையருள் கடையனுடைய பிரார்த்தனைக்கும் பயன் கிடைக்கும். நான் இதை என் சொந்த அனுபவத்திலிருந்தே சொல்லுகிறேன். நரக வேதனையை அனுபவித்திருப்பவன் நான். கடவுளின் அருளை முதலில் கோருவாயானால் மற்றவையெல்லாம் தாமே வந்து சேர்ந்து கொள்ளும்.

'ராம நாமம்' என்னும் புத்தகத்திலிருந்து

கதர் மலர்

மலர் 5 | கர-ஹூ தை-மீ * ஜனவரி 1952 | இதழ் 4

ஸர்வோதய மார்க்கம்

மகாத்மா காந்தி

காந்தி சேவா சங்கம் 1938-ல் ஒரு ஹிந்தி மாதாந்திரப் பத்திரிகை ஆரம்பித்த பொழுது அதற்கு ''ஸர்வோதயம்'' என்ற பெயரை வைக்கும்படி மகாத்மா ஆலோசனை சொல்லி அனுப்பிய செய்தி.

சத்தியாக்ரஹமின்றி ஸர்வோதயம் சாத்தியமில்லை. இங்கே சத்தியாக்ரஹமென்ற சொல்லின் தாதுப் பொருளைக் கொள்ள வேண்டும். சத்தியத்தில் ஆக்ரஹம் அல்லது உறுதியில்லாதபொழுது அஹிம்சையிலும் இருக்க முடியாது. ஆகையால் ஸர்வோதயம் கைகூடுவது அஹிம்சை கைகூடுவதைப் பொறுத்திருக்கிறது. அஹிம்சை கைகூடுவதோ தவ ஒழுக்கத்தைப் பொறுத்தது. தவம் சாத்வீகமானதா யிருக்கவேண்டும். அதில் இடையறாத முயற்சி, பகுத்தறிவு ஆகியவையும் அடங்கும். தூய தவத்தில் தூய ஞானமும் இருக்கும். அனுபவம் என்னவென்றால், அஹிம்சை யென்று சொல்லுகிறார்களே தவிர, பலரிடம் குடி கொண்டுள்ள மனச் சோம்பல் காரணமாக உண்மை நிலைமையைத் தெரிந்துகொள்வதற்கும் அவர்கள் சிரமம் எடுத்துக் கொள்வதில்லை. உதாரணம் வேண்டுமா? இந்தியா ஏழை நாடு. நாம் இதன் ஏழ்மையைப் போக்க விரும்புகிறோம். ஆனால் இந்த ஏழ்மை வந்ததெப்படி? இதிலிருந்து தெரிவதென்ன? இது எப்படி விலகும் என்ற விஷயங்களை எவ்வளவு பேர் ஆராய்ந்து பார்க்கிறார்கள்? அஹிம்சை பக்தனுக்கு இம்மாதிரியான விஷயங்கள் சம்பூரணமாகத் தெரிந்திருக்க வேண்டும்.

இம்மாதிரியான சாதனங்களைத் தோற்றுவிப்பது ''ஸர்வோதயத்''தின் கடமையாகும். யாரேனும் ஒருவருடன் வாத விவாதம் செய்வது அதன் வேலையல்ல. ''ஸர்வோதயத்தை'' நடத்துவோர் காந்தி வாதத்தை மறந்து விடுவார்களாக. காந்தி வாதமென்று ஒன்று இல்லவேயில்லை. நான் புதிய விஷயம் எதையும் இந்தியாவுக்கு எடுத்துச் சொல்லவில்லை. பழைய பொருளையே தான் புதிய முறையில் கூறியிருக்கிறேன். அதைப் புதிய சந்தர்ப்பங்களில் உபயோகிக்க முயன்றிருக்கிறேன். ஆகையினால் என் கருத்துக்களை காந்தி வாதமென்று அழைப்பது சரியாகாது. எங்கெல்லாம் சத்தியமுண்டோ, அங்கிருந்தெல்லாம் அதை ஏற்போம்; எங்கே அது காணப்படுகிறதோ அங்கே அதைப் புகழ்வோம்; அதை அனுசரிக்கவும் செய்வோம். அதாவது, ''ஸர்வோதய''த்தில் வெளியாகும் ஒவ்வொரு வாக்கியத்திலும் அஹிம்சையும் அறிவும் காட்சியளிக்க வேண்டும்.

ஸர்வோதய தினம்

ஆச்சாரிய வினேபா பாவே

ஸர்வோதய தினம்

இம் மாதம் 30-ம் நாள் காந்தியடிகள் பிரிந்த நாள். அன்று ஸர்வோதய தினம். தேசத்திலுள்ள எல்லாக் கிராமங்களிலும் ஏதாவதொரு வேலை அன்று வகுத்து நடைபெறும். அப்படிச் செய்வது முறையுமாகும். மகாத்மாக்களின் நினைவு சாதாரண மனிதர்களாகிய நமக்குச் சோர்வை யகற்றி உற்சாக மூட்டும் சக்தி வாய்ந்தது. இம்மாதிரி எவ்வளவு அதிகமாகப் பெரியோர்களின் ஞாபகங்களை நாம் சேகரிக்கிறோமோ அவ்வளவுக்கு நல்லது. ஆனல் நான் அந்த நாளை காந்திஜி தினம் என்பதற்குப் பதில் ஸர்வோதய தினம் என்று அழைக்க விரும்புகிறேன். ஏனென்றால் என்னதான் இருந்தாலும் ஒரு கொள்கையைப் பின் பற்றுவது ஒரு மகானைப் பின் பற்றுவதைவிட எளிதாகும். சில தினங்களுக்கு முன் நான் தாது சமாஜத்தில் நடந்த ஒரு வைபவத்தில் கலந்துகொண்டேன். அங்கு கூடியிருந்த அன்பர்களுக்கு நான் சொன்னது, "தாதுவின் பெயர் அழியட்டும்—சர்வேசுவானின் பெயர் திகழட்டும்." அதையே நான் இங்கு மறுமுறையும் சொல்ல விரும்புகிறேன். காந்திஜி இந்தக் கருத்தில் மிகவும் பற்றுள்ளவர். ஜனங்கள் அவரது பிறந்த தினத்தை காந்தி ஜயந்தி என்று கூற முயன்றார்கள். ஆனல் அவர் அந்த நாளை சர்க்கா ஜயந்தியென்றே அழைக்கச் சொன்னர். அப்படிச் செய்வதனல் ஒரு தனி மனிதரின் ஞாபகத்தைக் காட்டிலும், ஒரு கொள்கையின் ஸ்தூலமான தோற்றத்தையே நிரந்தரமாக்கக் கூடும்.

சமீபத்தில் காந்திஜி தென்னப்பிரிக்காவிலிருந்து வெகு நாட்களுக்கு முன் தன் நண்பருக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்க நேர்ந்தது. அதில் அவர் "என் பெயர் அழிந்தால் தான் என் நோக்கம் நிறைவேறும்" என்று எழுதியுள்ளார். இந்தக் கருத்துப்படி ஞானேஸ்வரர், "எனக்கொரு அருள் செய்வாய், என் புகழை நிலை நிறுத்தாதே" என்றும் சொன்னர். அவர் அவருடைய பெயரும் ரூபமும் அழிந்து போக விரும்பினர். மனிதன் இறந்தே தீரவேண்டியதால் கருத்து நிலைக்கட்டும். நாம் தனி நபர்களின் ஞாபகங்களை நிலைநாட்டி வந்தால் நாளடைவில் கருத்துக் குழப்பமடைந்து, குறுகிய நோக்குடன் கூடிய சிறு சிறு வகுப்புகள் தோன்றி, சமுதாயமே சின்ன பின்ன மாவதற்கும் இடமுண்டு. ஏற்கெனவே நம் தேசத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உயிருள்ள அவதாரங்கள் இருக்கின்றன. அவர்களின் சீடர்கள் அவர்கள் உயிரோடிருக்கும் பொழுதே அவர்களைப் பூஜிக்க ஆரம்பித்து விட்டார்கள். இது முற்றிலும் சரியல்ல.

கர்மத்தால் தியானம்

காந்திஜி தன்னை ஒரு சாதாரண மனிதராகவே கருதி வந்தார். நாமும் அவரை அப்படியே கருதுவோம். அதில் பெருமையிருக்கிறது. அன்று ஒரு புனிதமான நாமம் உச்சரிக்க வேண்டுமானல், ஏன் கடைசியாக, அவர் பேரில் குண்டு பாய்ந்தவுடன், இயற்கையாக பக்தியுடன் அவர் வாய் விட்டு வந்த நாமத்தையே வைத்துக் கொள்ளலாகாது? ஆகையால் நான் அவரது சிராத்த தினத்தை "ஸர்வோதய தினம்" என்று அழைப்பேன். அந்த நாளை ஆழ்ந்த தியானத்தில் பயன் படுத்துவோமானல் பெரிய அளவில் நன்மை பிறக்கும். செயலற்ற தியானம் நம் வாழ்க்கையில் நிரம்பியிருக்கிறது. எல்லா மதங்களின் உபதேசமும் கர்மத்தால் தியானம் செய்வதே யாகும். இதை நாம் மறந்து விட்டோம். காந்திஜி இந்த உபதேசத்தின் உருவாயிருந்தார். அதை நம் வாழ்க்கையில் மீண்டும் அனுஷ்டிக்க வேண்டும்.

பொது துப்புரவு நமது பிராயச்சித்தம்

ஆகையால் நான் எல்லோருக்கும் ஊர் சுத்தம் செய்தலை அன்றைய வேலையாகக் கூறுகிறேன். அன்று நாம் அனைவரும் தோட்டிகளாக, தேசத்திலுள்ள குப்பையையும் அசுத்தியையும் அகற்றுவோம். நாம்

127784

தோட்டிகளைத் திண்டாதாராக்கி கொடும் பாவம் புரிந்து விட்டோம். நம் தேசத்தை உலகத்திலேயே வேறெங்கும் இணையில்லாத அளவு அசுத்தி யாக்கிவிட்டோம். நாம் இவ் விரண்டு கொடுமைகளுக்கும் பிராயச்சித்தம் செய்தாகவேண்டும். எளியோர், பெரியோர் யாவரும் அடக்கத்துடன் இதைச் செய்யும் பொழுது, ஒவ்வொருவரும் "நான் தான் இந்த உலகத்தில் மிகவும் தாழ்ந்த ஜீவன்" என்ற எண்ணத்துடன் செய்யட்டும்.

உற்பத்திப் பெருக்கம்

அம்மாதிரி, நம் தேசத்தில் உற்பத்தி மிகவும் அவ்சியமாயிருக்கிறது. ஆகையால் அனைவரும் அன்று நூற்கட்டும். அனைவரின் இதயமும் அன்பென்னும் நூலால் இணைக்கப்பட வேண்டும். மிகவும் நோய்வாய்ப் பட்டிருப்பவரைத்தவிர மற்ற எல்லோராலும், வாலிபம் வயோதிகம் என்ற பேதமில்லாமல், நூற்கக்கூடும். ஆகையால் அதை உற்பத்திப் பெருக்கத்திற்கு உழைப்பாகக் கொள்ள வேண்டும்.

மேலே கூறிய இரண்டுந்தான் அன்றைய வேலைத் திட்டம். அத்துடன், எல்லோரும் சேர்ந்து நம் மனதைத் தூய்மைப் படுத்தவும், ஆண்டவனை அருள் புரியுமாறு பிரார்த்தனை செய்யவும் வேண்டும்.

ஸர்வோதய தியானம்

இந்த வேலைத் திட்டத்துடன் ஸர்வோதய லட்சியத்தைப்பற்றிய தியானமும் கலந்திருக்கவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பல ரீதியில் தியானம் செய்யலாம். ஸர்வோதயம் என்ற வார்த்தைக்குத் தாங்கள் விரும்பும் அளவு ஆழ்ந்த கருத்தைக் கொடுக்கலாம். உதாரணமாக, நம் நோக்கம் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரின் எழுச்சிக்காக மட்டும் நாம் உழைப்பதில்லை; நாம் அனைவரின் நன்மையையும் நாடுகிறோம். அடிப்படையில் உண்மையாக இருப்பவைகளில் பரஸ்பர குரோதம் இருக்க முடியாது என்ற உண்மையை ஞாபகப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவரவர் மனோவளர்ச்சிக்குத் தகுந்தவாறு சந்தோஷ வாழ்க்கை பற்றிய கருத்துக்களில் பேதமிருக்கக் கூடும். மூன்றாவதாக, தியானம் என்பதுதன்னையே மறந்து, வாழ்வின் ஐக்கியத்தை உணர்ந்து, தன் நலத்தை மறந்து, பிறருக்கு சேவை செய்வதே நோக்கமாகக் கொள்ளல் ஆகும். இதன் மறுக்க முடியாத முடிவு என்னவெனில் பிறர் நலன்களைப்பாதிக் காமலும், சத்தியத்தில் பற்றும் இருந்தாலன்றி இதை அடைய முடியாதென்பதாகும். தன்னடக்கத்தை வளர்க்க வேண்டும். இம்மாதிரி அன்றைய தினத்தை ஸர்வோதயத் தத்துவத்தைப் பற்றிய சிந்தனையில் செலுத்த வேண்டும். கடவுள் நம்மீது மிகவும் கருணை கொண்டுள்ளார். புராதன காலம் முதல் இன்று வரை அவர் நம் தேசத்துக்கு மகான்களைத் தந்தருளியுள்ளார். இன்றுள்ள சோர்வுற்ற நிலைமையில்கூட நமக்கு எத்தனையோ மகான்களை வருவித்திருக்கிறார். நம் இதயத்தை நாம் திறந்து வைப்போமானால் அவர்களின் ஆத்ம ஒளி நம் இதயத்தில் பாய்ந்து நம் வாழ்க்கையையே பரிசுத்தமாக்கி விடும். கடவுள் விரும்பினால் சாத்திய மாகாதது எது?

(7—1—'49-ல் குவாலியாவில் நிகழ்த்திய பிரார்த்தனைப் பிரசங்கம்.)

ராமராஜ்யத்தின் லட்சணங்கள்

(103-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இவ்வாறு சொல்வதைக் கேட்ட நண்பர்கள் சிலர், "கீழேஉள்ளவர்களை யல்லவோ நாம் மேலே கைதூக்கி விட வேண்டும்; மேலே உள்ளவர்களை ஏன் கீழே இறங்கச் சொல்லுகிறீர்கள்?" என்று கேட்கிறார்கள். ஆனால் என்னுடைய விண்ணப்பம் என்னவென்றால், கீழே உள்ளவர்களை மேலே எழுப்புவதற்குத் தான், நீங்கள் கீழே சிறிது இறங்கி வாருங்களேன். குழந்தையை எடுக்க வேண்டிய தாய் கீழே குனிவதில்லையா? அவ்வாறே நாமும் கீழே குனிந்து அங்குள்ளவர்களை மேலே எழுப்புவோமாக! அப்பொழுது தான் வேற்றுமை ஒழிய, உண்மை சுயராஜ்யம் கைக்கு வரும்.

இதுவே நமது லட்சியம். அதைக் குறித்து ஆலோசிப்பதே பாபுவை நினைப்பதாகும். பாபுவின் நினைவினால் ஊக்கம் பெற்று, இந்த லட்சியத்தை அடைய நாம் முயல வேண்டும். நாம் இதைச் செய்வோமானால் நாம் பாபுவின் நினைவை நிலைநிறுத்தியவர்களாவோம்.

வினோபா

ஜனவரி 30-உ —

தீரேந்திர மஜும்தார்
அக்கிராசனர், அகில பாரத சர்க்கா சங்கம்

முன் வருடங்களைப்போலவே இந்த வருடமும் தேச மக்கள் ஜனவரி 30-ந்தேதியைக் கொண்டாடுவார்கள். ஆனல் இவ் வருடம் தேர்தல்களில் மிக உற்சாகமாகக் காணப்படுகிறார்கள். இது ஏன்?

இந்தியாவின் சுதந்திரத்திற்காக காந்திஜி தனது வாழ்நாளில் போராடினர். சுதந்திரத்திற்கு ஏற்பட்ட அபாயத்தை எதிர்ப்பதில் தன்னையும் பலிகொடுத்துக்கொண்டார். அப்படியிருந்தும் இன்று ஒரே உறக்கம் ஏற்பட்டிருக்கிறது. இது ஏன்?

நமது பழைய புராணங்களில் நடந்ததைப் போல மீண்டும் இந்த யுகத்திலும் நடந்து வருகிறதா? கடலைக் கடைந்ததிலிருந்து வந்த விஷத்தை காந்திஜி உண்டு மறைந்தார். அமிர்தம் போன்ற அரசியல் சுதந்திரத்தை தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்வதில் இப்பொழுதுள்ள தேவன்மார்கள் சண்டையிட்டு மடிவார்களா? இது என்ன விபரீதம்? அதிகாரப் போராட்டத்தில் காந்திஜியை அவர்கள் மறந்துவிடுவார்களா? சிவபெருமான் ஆலகால விஷத்தை உண்ட பின்னர் தேவர்கள் அவரை மறந்துவிட்டார்கள். ஆனல் சிவகணங்களெப்படி சிவபெருமானை மறக்கமுடியும்? இதைப் போல், காந்திஜியின் சிஷ்யர்கள் அவரை எப்படி மறக்கமுடியும்? மக்கள் மறவாதிருந்தால் நிச்சயமாக ஜனவரி 30-ந்தேதி உற்சாகத்துடன் கொண்டாடப்படும் என்பதில் சந்தேகமில்லை. இந்த யுகத்தின் சாந்திக்காக புரட்சிக் கருத்துக்களை மக்களுக்கு ஊட்டிய தந்தையின் உடலையல்ல, அவரது ஆத்மாவை காந்திய பக்தர்கள் என்றும் மறக்க மாட்டார்கள்.

குவியல் முறையில் அமைந்த செல்வம், முதலாளித்துவச்சுரண்டல் முறைகாரணமாக இந்தக் காலம் சீரழிந்துவிட்டது. இக் குவியல் முறையை உடைத்துப் பரவல் முறை மூலமாகப் பங்கிட்டுக்கொடுக்க எல்லா முயற்சிகளும் செய்யவேண்டும். இந்தக் குவியல் முறை அதிகாரத்தை நிர்வகிப்பவர்கள் இதைச் செய்ய முன்வரமாட்டார்கள். சாதாரண எளிய மக்களே இதைச் செய்யக்கூடும். குவியல் முறையில் அமைந்த அதிகாரமும் செல்வமும் இறுதியில் மக்கள் கைக்கு கிடைக்கும்படி பாடுபடவேண்டும். இன்று இரண்டு வழிகளில் செல்வம் குவியல் முறையில் அமைந்துவிட்டது. ஒன்று இயந்திரக் குவியல் உற்பத்தியில்; மற்றொன்று நிலமெல்லாம் சிலர் கையிலேயே குவிந்திருப்பது. உற்பத்திக் குவியல் முறையை உடைத்தெறியக்கூடிய சாதனமாக காந்திஜி நமக்கு ராட்டையைக் கொடுத்தார். பரவல் முறையை சாதிப்பதற்கு இது உயர்ந்த கருவியாகும். ஆனல் நிலத்தைப் பரவல் முறையில் பங்கீடு செய்வதில் நமக்கு ஒரு வழி காட்டுவதற்கு முன் அவர் மறைந்துவிட்டார். ஆகவே அந்த வேலையைப் பூர்த்தி செய்வதற்காக இன்று வினேபாஜி இப்பெரும் பணியை மேற்கொண்டுள்ளார்.

இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுதிலும் அஹிம்சா முறையில் நிலத்தை எப்படிப் பங்கீடு செய்யமுடியும் என்பதை இப்பொழுது வினேபாஜி நிரூபித்து வருகிறார்.

காந்திஜியின் தலைமையில் இந்தியா அஹிம்சா முறை மூலம் தனது அரசியல் பிரசினையைத் தீர்த்துக்கொண்ட பெரும் புரட்சியை அன்று உலகம் கண்டது. இன்று அதே அஹிம்சா முறையில் சமூக பொருளாதாரப் பிரசினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு இந்தியா தயங்குமா? பொருளாதாரப் புரட்சி யாகத்திற்காக அக்னி குண்டத்தை வினேபாஜி இன்று தூண்டி வளர்த்து விட்டார். இந்த அக்னி குண்டத்தில் ஆஹுதி செய்ய மக்களை நம் தலைவர் வினேபாஜி அறைகூவுகிறார்.

இப்பொழுது இம்மகா யாகத்தில் தனது காணிக்கையைக்கொடுத்து தியாகப் பிரசாதம் பெற யார் முன் வருகிறார்கள் என்பதுதான் கேள்வி. சிவகணங்களைப்போல காந்திஜியின் பக்தர்கள் இப்புனிதமான ஜனவரி 30-ல் பூதான யக்ஞத்திற்கு உற்சாகத்துடன் தீவிர பிரசாரம் செய்ய முன் வருவார்களென்று நம்புகிறேன்.

நிலமுள்ளவர்கள் இம்மகா யக்ஞத்தில் தங்கள் பூமிக் காணிக்கையை இதயபூர்வமாக சமர்ப்பணம் செய்ய முன் வந்து, தேசம் எங்கும் மக்களின் மனம் மாறி ஒரே நோக்குடன் தியாக அக்னியை வளர்க்கப் பிரார்த்திக்கிறேன்.

★ ★

★ ஸர்வோதய மேளா ★

உழைப்பின் காணிக்கையாக நூல் சிட்டம்

காந்திஜியின் அஸ்தியைக் கரைத்த இடங்களில் பிரதி வருஷமும் மேளா நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டிருந்ததையொட்டி, சென்ற வருஷம் பிப்ரவரி 12-ம் தேதி இந்தியாவெங்கும் நடந்ததைப்போல் இனியும் நடக்கும்.

நூல் காணிக்கை ஒரு நல்ல காரியம். அதை முறைப்படி செய்ய வேண்டும். இங்கே நூல் கொண்டுவந்து கொடுத்தவர் ஒவ்வொருவரும் ஏராளமான நூல் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் வருகிறவர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சிட்டம் செலுத்தினால் போதும் என்பது என் அபிப்பிராயம். அதிகமாகக் கொடுப்பதில் குற்றமில்லை. பெற்றுக்கொள்வது சரி என்றாலும், இந்த சந்தர்ப்பத்தில் ஒரே சிட்டம் போதும். இன்னும் அதிகமாக நூற்று வைத்திருப்பவர்கள் அதை நெய்வித்துத் தாமே உடுத்தலாம், அல்லது நன்கொடையாகவே அளிக்க விரும்பினால், சர்க்கா சங்கத்தினிடம் அளிப்பார்களானால் சங்கம் அதை எளியோரின் பணிக்குப் பயன்படுத்தும். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் தலா ஒரு சிட்டம் காணிக்கையளிப்பதனால் மேளாவில் கலந்துகொண்டவர் எத்தனை பேர் என்ற கணக்கும் தெரிந்துவிடும். எத்தனை பேர் வரமுடியுமோ அவ்வளவு பேரும் இதற்கு வரவேண்டும் என்பது என் விருப்பம்.

புதிய வகை யாத்திரையொன்று நாட்டில் தோன்றுவதற்கு இடமிருக்கிறதென்றும், இதன்மூலமாகப் பிற யாத்திரைகளும் திருந்தி புத்துயிர் பெறுவதற்கு இடமேற்படும் என்றும் நான் எதிர்பார்ப்பதே காரணம். இல்லையேல் இப்பொழுது வழங்கும் பொழுதுபோக்குக்கான யாத்திரைகளும் விழாக்களும் இருக்கின்றனவே அவற்றினால் அதிகமான பயன் எதுவுமில்லை.

செயல்மயமான வழிபாடு

ஊழியர்கள் கிராமம் கிராமமாகச் சுற்றி, காணிக்கை செலுத்தல் என்ற கருத்தின் தத்துவத்தை மக்களுக்கு விளக்கிக் கூற வேண்டும். இது வெற்றிகரமாக நடைபெறுமானால் நாடெங்கும் இதுவே ஒரு புனித வழக்கமாகிவிட, இந்தியக் குழந்தைகளுக்கும் நாட்டுக்கென்று காணிக்கை செலுத்துவதில் ஒரு ஊக்கம் பிறக்கும். பிற்காலத்தில் கையில் சிட்டமில்லாமல் எவருமே மேளாவுக்கு வர மாட்டார்கள். சிட்டமில்லாதவர்களை வராமல் தடுப்பது என் கருத்தல்ல. ஆனால் சிட்டம் கொண்டுவருதல் என்பது யாத்திரையின் ஒரு பகுதியாகிவிடும்போது எல்லோருமே கொண்டுவரத்தான் செய்வார்கள்.

இந்த நூல் காணிக்கை ஏற்பாட்டினால் நாட்டில் செயல்மயமான வழிபாடு அனுஷ்டானத்திற்கு வருவதோடுகூட, மக்களிடையே பாரமார்த்திக நோக்கமொன்று பரவக்கூடும். ஒரு சிட்டத்திற்கு அதிகமாக அளிக்கக்கூடாதென்று நான் சொல்வதைப்போல, பணம் கொடுப்பதற்கும் நாம் இடமளிக்கக் கூடாது. ஒரு சிட்டம் நூல் காணிக்கையின் மூலமாக கதர் சுய தேவைப் பூர்த்திக்கு ஊக்கமளிப்பதற்கும், பக்தியில் எல்லோரும் சமம் என்ற கருத்து வெளியாவதற்கும் இடம் இருக்கிறது. பணம் பெறுவதற்கே இடம் இருக்கக்கூடாதென்று சொல்வதன் கருத்து, நாம் உடல் உழைப்பினால் உற்பத்தி செய்யும் பொருளையே காணிக்கையாக அளிக்கவேண்டும், அதுவே புனிதமான வஸ்து என்பதே. இது ஒரு புதிய வேள்வி; இவ்வேள்வியில் பணத்திற்கு மதிப்புக் கிடையாது, உழைப்புக்கே மதிப்புண்டு என்ற கருத்தும் பரவும். இல்லையேல் இம்மாதிரியான மேளா நடக்குமிடங்களில் பணப்பித்தர்கள் வந்து மொய்த்துக்கொள்ள, அதிலிருந்து எவ்வளவோ தீமைகள் தோன்றுவதற்கு இடம் உண்டாகிவிடும். இந்த நூல் காணிக்கை ஏற்பாட்டில் இந்த பயம் எதுவும் இல்லை.

— வினோபா

"ஸர்வோதயம்", நவம்பர் '49

★ ★ ★

★ ராமராஜ்யத்தின் லட்சணங்கள் ★

1907-8ல் காந்திஜி 'ஹிந்த் ஸ்வராஜ்' (இந்திய சுயராஜ்யம்) என்ற புஸ்தகத்தை எழுதினர். அதில் அவர் தாம் எதை சுயராஜ்யமென்று கருதியிருந்தாரோ அதைத் தெளிவாக வெளியிட்டதோடு, அதை எய்துவதற்குரிய வழிகளையும் கூறினர். புஸ்தகத்தின் இறுதியில் அவர் பின் வருமாறு கூறியிருக்கிருர்: "கடவுள் சாட்சியாக என் எஞ்சிய ஆயுள் முழுதையும் இந்த சுயராஜ்யத்தை எய்துவதற்கே அர்ப்பணம் செய்கிறேன்." இது ஒரு ஒப்புயர்வற்ற லட்சியமாகும். ஒரு மனிதர் சுயராஜ்யமென்ற லட்சியத்தைத் தெளிவாகக் கண்டு அதை எய்துவதற்குரிய வழிகளை வகுத்ததோடு நில்லாமல், 40 வருஷ காலம் அதே வழியில் இந்திய நாட்டையும் அழைத்துச் சென்ருர். இறுதியில் நாம் ஏதோ ஒரு வகை சுயராஜ்யத்தை அடைந்து விட்டோம்.

சத்தியத்தில் உறுதி

அவர் வகுத்த வழியே சத்தியாக்கிரகமென்பது. சத்தியாக்கிரகமென்ருல் வெறும் சாத்விகச் சட்ட மறுப்பு மட்டுமல்ல; நம் வாழ்வில் இடையருத வகையில் சத்தியத்தில் உறுதியோடிருத்தல் என்பதாகும். சத்தியத்தில் உறுதி இருக்கவேண்டுமென்ருல், அது அஹிம்சை அல்லது அன்பினலேயே நடைபெறக்கூடியதாகையால், அஹிம்சையும் அதில் சேர்ந்துவிட்டது. இவ்வாறு சாதனங்களை வரையறுத்துக்கொண்ட அவர் முதலில் தென்னுப்பிரிக்காவில் அவைகளைக் கையாண்டு பார்த்தார். அங்கே வெற்றி கிடைக்கவே அவர் இந்தியாவுக்குத் திரும்பி வந்து பூரண நம்பிக்கையுடன் தமது புதிய ஆயுதங்களை நமக்குக் கொடுத்தார்.

ஒரு வருஷத்தில் சுயராஜ்யம்

இந்தக் கருவியினிடத்தில், அவருக்கிருந்த நம்பிக்கையை என்னென்பது! இதைச் சரிவர உபயோகிக்க வேண்டியதுதான் தாமதம், சுயராஜ்யம் வருவதில் தாமதமில்லையென்று அவர் சொல்வதுண்டு. ஒரு சமயம் வேலைத் திட்டத்தையெல்லாம் அமைத்த பிறகு அது சரிவர நிறைவேற்றப் படுமானல் ஒரே வருஷத்தில் சுயராஜ்யம் கிட்டிவிடுமென்று உலகமறிய வெளியிட்டார். அதற்குரிய முயற்சிகளையும் அந்த ஒரு வருஷத்திற்குள் அவர் செய்வித்தார். எனக்கு அப்பொழுது நடந்தது இன்னும் ஞாபகம் இருக்கிறது. வருஷம் பூர்த்தியாவதற்கு இன்னும் 18 நாட்கள்தான் பாக்கி. அப்பொழுது நாங்கள் சபர்மதி ஆசிரமத்திலிருந்தோம். ஆசிரமத்தைச் சேர்ந்த ஒருவர், "பாபு, வருஷம் முடிவதற்கு இன்னும் சில தினங்கள் தானே இருக்கின்றன. சுயராஜ்யம் வருவதற்குரிய அறிகுறிகள் எதையும் காணேமே!" என்ருர். காந்திஜி, "இதோ பார், உறுதியை மட்டும் விட்டுவிடாதே. 18 நாளில் மகாபாரத யுத்தமே நடந்துவிடவில்லையா? இப்பொழுதும் இந்த 18 நாட்களுக்குள் நமது வேலைத் திட்டம் நிறைவேற்றப்படுமானல் சுயராஜ்யம் வந்துதான் தீரும்" என்ருர்.

நாம் அடைந்தது காந்திஜி விரும்பிய சுயராஜ்யமல்ல

வருஷம் பூர்த்தியாகிவிட்டது. சுயராஜ்யம் மட்டும் வரவில்லை. ஏனெனில் நாம் அவர் வகுத்திருந்த திட்டத்தை நிறைவேற்றினேமில்லை. ஆனல் காந்திஜி மட்டும் இது ஒன்றே வழி என்று வற்புறுத்தி வந்தார். அதனல் தான் சுயராஜ்யம் வரவேண்டும் என்று சொல்லி வந்தார். அந்த உறுதியில் ஒரு சிறிதளவு நம்மையும் பற்றிக்கொள்ளவே கடைசியில் நாமும் சுயராஜ்யத்தைக் கண்டோம். ஆனல் கிடைத்த சுயராஜ்யத்தினல் பாபுஜிக்கு சமாதானம் உண்டாகவில்லை. அவர் மனம் மிகவும் புண்பட்டிருந்தது. மாஜினியும் இதை யொத்த நிலையிலேயே இருந்தாரென்று கேள்விப்படுகிருேம். இத்தாலி அடைந்த சுதந்திரத்தைக் கண்டு அவர் மனம் வெம்பினுலும் "இந்த சுயராஜ்யம் நான் விரும்பியதல்லவே" என்ருராம். காந்திஜியும் அவ்வாறே கூறினர். ஏனெனில், நம் நாட்டவரால் எப்படியோ நடத்தப்படும் ஆட்சியெல்லாம் சுயராஜ்ய மாகாது. சுயராஜ்யம் என்பது 'சுயம்'; ஒவ்வொருவராலும் நடத்தப்படும் ராஜ்யமாகும்.

நாட்டில் வாழும் ஒவ்வொரு மனிதனும் இது என்னுடைய ராஜ்யம் என்று உணர்வது எப்பொழுது சாத்தியமோ, அப்பொழுது தான் உண்மை சுயராஜ்யம் வந்ததாகச் சொல்லமுடியும். இதையே காந்திஜி ராம ராஜ்யமென்றும் அழைத்து வந்தார். ராம ராஜ்யத்தை துளசிதாசர் கீழ்க்கண்ட முறை யில் வர்ணித்திருக்கிறார் :

"யாரும் எவருக்கும் விரோதியாயில்லை. ராமருடைய பிரதாபத்தினால் வேற்றுமைகள் அற்றுவிட்டன."

ராமராஜ்யத்தின் லட்சணங்கள்

'விரோத மின்மையும்' 'வேற்றுமை அற்றுப் போதலும்' என்ற இவையிரண்டே ராமராஜ்யத்தின் லட்சணங்களாகும். காந்திஜியும் இவ்வாறே சுயராஜ்யத்தை விளக்கி வந்தார். ஆனால் அவர் கண்ட தென்ன? சுயராஜ்யம் வந்ததுதான் தாமதம், விரோதமெல்லாம் நீங்குவதற்கு மாறாக, விரோதத் தீ இதற்கு முன் என்றும் கண்டிராத அளவுக்குக் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கிற்று. இதைக் கண்ட அவர் நொந்தது இயற்கையே. காந்திஜி உயிர் வாழ்ந்த நாளில் நம்மால் எதை நிறைவேற்ற முடியவில்லையோ அதை இப்பொழுது நிறை வேற்றுவது நமது கடமையாகிறது. சுய ராஜ்யத்தின் லட்சணங்களாகிய மேற்கூறிய இரண்டையும் நாம் இப்பொழுது நிறை வேற்றியாக வேண்டும். இந்தியாவில் எத்தனையோ இனத்தாரும் சமூகத்தாரும் வாழ்கிறார்களே என்றால் நட்பின் பாடத்தை நாம் கற்பதற்கே. இவ்வாறு இருப்பதாக நாம் உணர வேண்டும். நமது தாராள மனப்பான்மையுள்ள பண்பாட்டின் 'போதனையை' நாம் உணருவோமானால் வேற்றுமையோ விரோதமோ இங்கே தலை யெடுக்கமாட்டா.

நம் மிடையேயுள்ள வேற்றுமைகளைப் பார்ப்பதற்கு நாம் எங்கும் எட்டிப் போக வேண்டாம். இங்கேயே பாருங்கள். இந்த அகதிகளின் நிலைமை எங்கே, நம்முடைய நிலைமை எங்கே? அவர்கள் தங்கியிருக்கும் கூடாரங்களுக்கும் நாம் வாழும் அரண்மனை களையொத்த கட்டிடங்களுக்கும் ஒப்புவமை எது? இவை இரண்டும் இந்த இந்தியத் தலை நகரத்திலேயே ஒன்றின் பக்கத்தில் ஒன்றாக இருப்பதைக் காண்கிறோம். ஸ்ரீ ராமச்சந்திரர் வாழ்ந்த வாழ்க்கையை துளசிதாசர் பின் வருமாறு வர்ணித்திருக்கிறார் :

"மரத்தடியில் அண்ணல் வீற்றிருக்க வானரங்கள் மரக்கிளைகளில் அமர்ந்திருந்தன. ஸ்ரீராமர் அவர்களையும் தமக்குச் சமமாகவே மதித்திருந்தார்."

ஸ்ரீ ராமச்சந்திரர் மரத்தின் அடியில் அமர்ந்திருக்க, அவருடைய ஊழியர்களான அறிவில்லா வானரங்கள் அவருக்கு மேலே மரக் கிளைகளில் உட்கார்ந்திருந்தன. இம் மாதிரியான ஊழியர்களைக் கொண்டு ஸ்ரீ ராமர் தம் வேலைகளை நடத்தினார். அவைகள் அனைத்தையும் தமக்குச் சரிநிகராகச் செய்தார்; அதாவது, எல்லோருக்கும் தமக்குரிய மரியாதையே அளித்தார். அவ்வாறே நம் மிடையே யுள்ள ஆற்றல்மிக்கோர் சிறந்த ஊழியர் பதவியை ஏற்க வேண்டும். அப் பொழுது உண்மையான ஸ்வராஜ்யத்தைக் காண்பது சாத்தியமாகும்.

ஆனால் உண்மை சுயராஜ்யத்தை இப் பொழுதைக்கு நாம் காணுவதேது? ஒரு விஷயத்தைப் பாருங்கள். ஆயிரக்கணக்கான ஹரிஜனங்கள் பஞ்சாபிலிருந்து இங்கே வந்து கொண்டிருக்கிறார்கள். இங்கே அவர்களுக்கு நிலம் வேண்டுமாம். ஆனால் அவர்களைப் பார்த்து, "நீங்கள் ஏற்கெனவே இருந்த ஊரில் உங்களிடம் நிலமேது? நீங்கள் பிறர் நிலத்தில் கூலி வேலை செய்து தானே பிழைத்து வந்தீர்கள்! ஆகையால் உங்களுக்கு நிலம் எப்படிக் கிடைக்கும்? அங்கே எவர்களிடம் நிலமிருந்ததோ அவர்களுக்கு மட்டுமே இங்கே நிலம் கிடைக்கும். அதுவும் அங்கே எவ்வளவு நிலம் இருந்ததோ, அதையே இங்கும் எதிர்பார்க்கலாம்" என்று சொல்லப் படுகிறது. கருத்து என்னவென்றால், புதிதாக சமுதாயம் ஒன்றை நிறுவத் தொடங்கும் பொழுதும் நாம் நமது பழய வேற்றுமை களைச் சிறிதும் கூட்டவோ குறைக்கவோ செய்யாமல் அப்படியே வைத்துப் பாது காக்க விரும்புகிறோம். இந்த நிலையை மாற்ற விரும்பும் நாம் நமது சொந்த வாழ்க்கை யிலேயே மாறுதலைத் தொடங்குவோம்.

ஒரு படி இறங்க வேண்டும்

ஒவ்வொருவரும் அவரவர் உள்ள நிலையி லிருந்து ஒரு படி இறங்க வேண்டும். நான்

(99-ம் பக்கம் பார்க்க)

ஸர்வோதயத்தின் அஸ்திவாரம்

ஸ்தாபனப் பற்றற்ற சேவை

ஸர்வோதய சமாஜத்தைப் பற்றிய கற்பனை தோன்றியிருப்பது உங்களுக்குத் தெரியும். இந்த சமாஜம் அல்லது சமூகத்தை நீங்கள் எப்படி அமைக்கப் போகிறீர் களென்று என்னைப் பலரும் கேட்கிறார்கள். உங்களுக்கு இதைத் தெரிந்துகொள்ள ஆசையிருக்கும். நான் கூறும் பதில் என்னவென்றால், இன்று நாட்டிலுள்ள எத்தனையோ ஸ்தாபனங்களுடன் இன்னும் ஒன்றைச் சேர்க்க நான் விரும்பவில்லை என்பதே. ஆனால் வாழ்க்கையையே திருத்தி அதற்குப் புதிய உருவொன்று கொடுக்கக்கூடிய ஒரு கருத்தை உங்கள் வாழ்க்கையில் புகுத்தவேண்டி, சகோதர சகோதரிகளுக்கு அதன் பொருளை விளக்கிக் கூறுவதே நோக்கம். ஒவ்வொரு தனி மனிதனுடைய வாழ்க்கையிலும் இக் கருத்து இடம் பெற்றுவிடுமானால் காட்டுத் தீயைப் போல் எங்கும் பரவிவிடும். இதற்குப்பதிலாக ஸ்தாபனம் ஒன்றை அமைக்கத் தொடங்குவோமானால் அதில் போட்டா போட்டிகளும், பதவி வேட்டைகளும் புகுவதற்கு இடமுண்டாகையால் நான் அதை விரும்பவில்லை. சமுதாயம் நல்ல கட்டுப்பாடுள்ளதாக, இணக்கம் வாய்ந்ததாக இருக்க வேண்டும். குடும்பங்களில் பொது நோக்கம் காணப்படுகிறது. அது இயற்கையிலேயே தோன்றிய தொன்றாகும். அதே வகை இணக்கம் தேவை. ஆனால் அதில் குடும்பத்தின் நலனை மட்டும் கருதுவதே வழக்கமாயிருக்கிறது. அதில் குறுகிய மனப்பான்மை காணப்படுகிறது. ஆகையால் அந்தப் பகுதியை விட்டு விட்டு இயற்கையாகக் காணப்படும் இணக்கமென்ற அம்சத்தை மட்டும் நாம் ஏற்போம்.

சமுதாயத்தில் கூட்டுறவு

சமயம், சம்பிரதாயம், மதமென்ற பெயருடன் மனிதர்கள் ஒன்று கூடும்பொழுது சமூகத்திற்கு நன்மை செய்யக்கூடிய சக்தி அவர்களிடம் வளருமென்று நான் நினைக்கவில்லை. அவர்கள் அன்பினால் பிணிப்புண்டவர்களாக வெளித் தொடர்புகளை முக்கியமாகக் கருதாமல், ஒருவனுடைய மதத்தைவிட அவனுடைய மனிதத் தன்மைக்கு அதிகச் சிறப்பளித்து, வெளி ஆடம்பரங்களைவிட உள் நோக்கத்திற்கு அதிக மதிப்பளித்து, மனிதனை மனிதனென்ற முறையில் உணர்ந்து எற்கும் பொழுது நன்மை செய்வதற்கு வேண்டிய திறனும் பெருகும். எத்தனையோ ஸ்தாபனங்கள் உயர்ந்த நோக்கங்களுடன் தோன்றியிருந்த போதிலும் பிற்காலத்தில் அவற்றிலிருந்தே தீமைகள் தலையெடுத்ததைப் பார்த்திருக்கிறேன். அப்பொழுது அந்தத் தீமைகளுக்கு ஏதோ காரணம் சொல்லித் தப்ப முயலுவதும், அவைகளைப் பிறர் கண்ணுக்குப் படாமல் மறைப்பதும் உண்டு. அப்பொழுது, செயல்களெல்லாம் வெவ்வேறாகி ஒரே ஸ்தாபனம் பல துண்டுகளாகப் பிரிந்து போவதுண்டு. இந்தத் துண்டாகும் வேலை எனக்கு வேண்டாம். நான் கோருவது பூரணமான ஆனந்தத்தை. அந்த ஆனந்தம் மனதிலேயே பெறுவது மட்டுமல்ல—அது இப்பொழுதே எனக்குக் கிடைத்துக்கொண்டு தானிருக்கிறது — நேரிடையாகச் செய்யும் முயற்சியிலிருந்து கிட்டும் ஆனந்தமே.

சத்தியமே ஸர்வோதயத்தின் அஸ்திவாரம்

ஆகையால், ஒருவர் எந்த மதத்தைச் சேர்ந்தவராயிருந்த போதிலும் நான் அவரை மனிதரென்ற வகையிலேயே கருத விரும்புகிறேன். அவரும் என்னை அதே முறையில் நோக்குவாரானால் எல்லோருக்கும் நன்மை பயக்கும் சேவை செய்வதற்கு இடமுண்டு. உலகமனைத்திற்கும் நன்மை விளைவிக்கக் கூடிய ஊழியத்தை மனிதன் செய்யவேண்டுமென்பதே என் விருப்பம். ஸர்வோதய சமாஜமென்றால் என்ன அர்த்தம்? "எல்லோருள்ளும் நான் இருக்கிறேன், என்னுள் எல்லோரும் இருக்கிறார்கள்" என்பதே. ஆகையால் என் சொந்த வாழ்க்கையிலும் வியாபாரத்திலும், தொழிலிலும், சமுதாய ஏற்பாட்டிலும், எல்லா இடங்களிலும் பொய்க்கு இடமே இருத்தலாகாது. எல்லா

(114-ம் பக்கத்தில் காண்க)

பூமிதான யக்ஞம் – விநோபாஜியின் கோரிக்கை

(பூமிதான யக்ஞத்தை விளக்கி உத்தரப் பிரதேச மக்களுக்கு விடுத்துள்ள செய்தி)

ஐந்து கோடி ஏக்கர் வேண்டும்

நிலமில்லாதவர்களுக்காக இந்தியா முழுதிலும் ஐந்து கோடி ஏக்கர் நிலம் கிடைக்க வேண்டுமென்று நான் கோரியிருக்கிறேன். இந்தக் கணக்கின் பிரகாரம் உத்தரப் பிரதேசத்தின் பங்கு ஒரு கோடி ஏக்கர் நிலமாகும். இது மிகப் பெரிய ஒரு வேலை. நம்முடைய செய்தி ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு வீட்டிற்கும், ஒவ்வொருவருடைய இதயத்திற்கும் எட்டும் போது தான் இந்த வேலை நடைபெறக் கூடும். அனைவரின் கூட்டு முயற்சியால் தான் இது நடைபெறும். தற்சமயம் ஐந்தாறு மாதங்களுக்குள்ளாக ஐந்து லட்சம் ஏக்கர் நிலம் பெறவேண்டும். இது நம்முடைய சங்கற்பத்தின் ஆரம்பமாகும். எனது இந்தப் பிரயாண காலத்தில் இவ்வளவு வேலை நடைபெற்று விட்டால் ஒரு நல்ல ஆரம்பமாகும். தேச முழுமைக்கும் இந்த வேலைக்காக இது ஒரு தூண்டுகோலாக இருக்கும்.

ஏழைகளும் சிறிய விவசாயிகளும்

பூமிதான வேள்வியில் முதலாவது கோரிக்கை ஏழைகளிடத்திலாகும். ஜனங்களுக்கு இது ஆச்சரியமாக இருக்கும். ஆனல் ஒவ்வொருவரும் தனது ஆத்ம பலத்தினல் முன்னேற முடியும் என்பதைக் கருத்தில் வைத்தால் இது ஆச்சரியப் படக் கூடியதாகத் தோன்ருது. சிறிதளவு நிலம் இருக்கும் விவசாயிகள் தம் நிலத்தில் சிறிது பாகத்தை அன்பின் சின்னமாகக் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறேன். இம்மாதிரி தெலுங்கானு, மத்தியப் பிரதேசம், விந்தியப் பிரதேசம், மத்திய பாரத் முதலிய இடங்களில் போதுமான நிலம் ஏழைகளிடமிருந்து கிடைத்திருக்கிறது.

பூமிதான வேள்வியில் பெரிய விவசாயிகளின் பங்கு அதிகமாக இருக்க வேண்டும். ஈஸ்வரன் கொடுத்த காற்று தண்ணீர் சூரிய வெளிச்சம் முதலியன யாவும் எல்லோருக்கும் பொதுவாக இருப்பதைப் போன்றே, அவரால் கொடுக்கப்பட்ட நிலமும் எல்லோருக்கும் பொதுவாகும். "பூமி தேவி அனைவருக்கும் தாயாவாள். மக்களனைவரும் பூமி தேவியின் புத்திரர்களாவர்," இது நமது நாகரிகத்தினுடைய முதல் வாக்கியமாகும். இதை வேதம் வெளிப்படுத்தியிருக்கிறது. நிலமில்லாதவர்களின் உரிமையைக் கருதி அவர்களை தனது குடும்பத்தவர்களாகப் பாவித்து தன்னுடைய நிலத்தின் ஒரு நல்ல பகுதியை அவர்களுக்கு தானமாகக் கொடுப்பது பெரிய விவசாயிகளின் கடமையாகும். மேலும், அதில் தான் அவர்களுக்குப் பெருமை இருக்கிறது.

பெரிய விவசாயிகளுக்குக் கூறியது ஜமீந்தார்களுக்கும் பொருந்தும். ஆனல் இப்பொழுது ஜமீந்தார்களெல்லாம் ஜமீன் அந்தஸ்திலிருந்து விடுதலையடைந்து கொண்டிருக்கிருர்கள். இந்நிலைமையில் அவர்களிடமிருந்து எதை எதிர்பார்க்கக் கூடும்? அவர்களின் சொந்த விவசாயத்திற்காக அவர்களிடத்தில் மீதமுள்ள நிலத்திலிருந்து ஒரு பாகத்தை பூமி தான வேள்விக்காக அவர்கள் கொடுத்துவிட வேண்டுமென்பது என்னுடைய விருப்பமாகும். இதைத் தவிர, சர்க்காரிடத்திலிருந்து கிடைக்கும் ஜமீன் நஷ்டஈடுத் தொகை முழுதையுமோ அல்லது ஒரு பாகத்தையோ அவர்கள் அன்பாகக் கொடுக்கலாம். இது எஜமானத்துவத்திலிருந்து விடுதலை பெறுவதாகும். என்னுடைய இந்த முயற்சிகள் யாவும் நம்முடைய பிரசினைகளைத் தீர்ப்பதற்கு நம் நாகரிகத்திற்கு அனுகூலமாகவுள்ள அமைதியான முறையைத் தேடுவதற்காகவே இருக்கின்றன. ஜமீந்தார்கள் இரண்டாவது தானமாகக் கொடுத்து அதில் ஒத்துழைப்பார்களானல் அமைதியான புரட்சி வழியை ஏற்படுத்திய நற்கீர்த்தி அவர்களுக்குக் கிடைக்கும்.

நிலமில்லாமல் பணம் வைத்திருப்பவர்கள் இந்த மகா யக்ஞத்தில் எவ்வாறு பங்கெடுத்துக்கொள்வது? நான் பணம் பெற்றுக்கொள்ள விரும்புவதில்லை. ஆனல் அவர்கள் நிலம் விலைக்கு வாங்கிக் கொடுக்கலாம். நிலமில்லாதவர்களுக்கு நிலம்

கிடைக்கக் கூடிய இடங்களில் அந்த நிலங்களில் கிணறுகள் தோண்டிக் கொடுக்கலாம். நிலத்தில் வேலை செய்வதற்கு எருதுகள் வாங்கிக் கொடுக்கலாம்.

பணமும் நிலமும் இல்லாதவர்களிடத்தில் உற்சாகமும், உழைக்கும் சக்தியும், தேசத்தின் மீது அன்பும் இருக்கிறது. அவர்களை இந்த பூமிதான வேள்வியின் சொத்து என்று நான் மதிக்கிறேன். அவர்கள் வீடு விடாகச் சென்று பிரசாரம் செய்யலாம்; இந்த வேள்விக்கு அனுகூலமான சூழ்நிலையை ஏற்படுத்தலாம். கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து கொண்டு குந்தாளத்தினல் பாழ் நிலத்தைச் சீர்திருத்தும் வேலையைச் செய்யலாம்; இம்மாதிரி செய்வதனல் அந்த நிலம் நிலமில்லாதவர்களுக்குப் பயன்படும்.

தற்சமயம் இந்த வேலைக்கு ஒவ்வொரு மனிதரிடமிருந்தும் நான் ஏதாவது எதிர்பார்க்கிறேன் என்பது இதன் சாரமாகும். நான் தரித்திரநாராயணர்களின் சார்பில் பேசிக் கொண்டிருக்கிறேன். மேலும், இது பாரதத் தாயின் கோரிக்கையாகும். இதனல் அனைவரின் இதயமும் சுத்தமாவதுடன் பிரதேசம் முழுதையும் சமத்துவப் படுத்துவதற்கு உதவியாகவும் இருக்கும். எந்தப் பிரதேசத்தில் கங்கை, யமுனை, ஸரயூ போன்ற புண்ணிய நதிகள் பாய்கின்றனவோ, எங்கு ராமர், கிருஷ்ணர், புத்தர் போன்ற அவதார புருஷர்கள் தோன்றியிருக்கிறர்களோ, எங்கு துளஸி தாஸர், சூரதாஸர் போன்ற கவிகளும் உத்தமர்களும் சஞ்சரித்திருக்கிறர்களோ அந்தப் பிரதேசத்திலிருந்து வேள்விக்கு நிலம் கிடைக்கும் என்று நம்பிக்கை இல்லையானல், வேறு எங்கிருந்து கிடைக்கும்?

★ ★ ★

★ வாழ்க்கையின் சாதனம் ராட்டையே ★

மகாத்மா காந்தி

நான் ராட்டையை என் மோக்ஷத்திற்கு வாயிலாய்க் கருதிய போதிலும் நான் அதை பிறருக்கெல்லாம் சுயராஜ்யம் பெறுவதற்கு உதவக்கூடிய சிறந்த ஆயுதம், நாட்டின் பொருளாதார நிலையைச் சீர்திருத்த உதவும் கருவி என்றே சொல்லி வருகிறேன். பிரம்மசரியத்தை அனுஷ்டிக்க விரும்புகிறவர்களுக்கும் நான் ராட்டையை அளிக்கவே செய்து வருகிறேன். இதைக் குறித்து எவரும் எள்ளி நகையாட வேண்டாம். ஏனெனில் இங்கே பேசுவது நானல்ல, அநுபவமாகும். தன் காம இச்சைகளை அடக்க விரும்புவோன், மனவமைதியைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அவன் உள்ளத்தில் கொந்தளிப்புகள் எல்லாம் அடங்கிப் போகவேண்டும். ராட்டை மிகவும் சாந்தமாகவும் சந்தடி இல்லாமலும் சுற்றுவதால் அதைப் பூர்ண நம்பிக்கையுடன் சுற்றியவர்களின் காம ஆசைகள் அடங்கியிருக்கின்றனவென்று கேள்விப்பட்டிருக்கிறேம். ராட்டையைச் சுற்றியதன்மூலமாக என்னல் என் கோபத்தை அடக்க முடிந்திருக்கிறது. ஒருவர் காலையில் நூற்று நிறுத்தி விடுவாரேயானல் நாள் முழுதும் அவருடைய மனம் அமைதியாகவே இருந்து வருமென்று நான் சொல்ல வரவில்லை. ஏனெனில் மனிதனுடைய காம வாசனைகள் காற்றிலும் வேகம் வாய்ந்தவையாகையால் அவைகளைப் பூர்ணமாக அடக்குவதற்கு எவ்வளவு பொறுமை இருந்தாலும் போதாது. நான் சொல்வதெல்லாம் ராட்டை அவர்களுக்கு மன அமைதி பெறுவதற்கு பேருதவி புரியும் என்பதே. ஆனல் என்னுடைய நோக்கம் மன அமைதியைப் பெறுவதே என்றால் நான் ராட்டையைவிட அதிகக் கவிதைச் சிறப்பு வாய்ந்த ஜபமாலையை ஏன் ஆதரிக்கக் கூடாதென்று எவரும் என்னைக் கேட்கலாம். இதற்கு என் பதில், ராட்டையிடம் ஜபமாலையிலுள்ள குணங்கள் இருப்பதோடு அதில் இல்லாத சில குணங்களும் காணப்படுகின்றன என்பது. நான் இதை திகம்பரனுய் இயற்கையோடு இயற்கையாய்க் கந்த மூலங்களைத் தின்றுகொண்டு இமயமலைக் குகையொன்றில் தனித்து வாழும் துறவிக்கு ஏற்றதென்று சொல்லவில்லை. என்னைப்போன்று சாதாரண உலக வாழ்வி லிருந்துகொண்டு நாட்டுப் பணியையும் பிரம்மசரிய அனுஷ்டானத்தையும் ஏக காலத்தில் செய்ய ஆவலுள்ள எண்ணிலடங்காத மக்களுக்கே தந்திருக்கிறேன்.

'ராட்டை—தத்துவ விளக்கம்' பக்கம் 49.

★ வர்க்கபேதமற்ற சமுதாயம் ★

தீரேந்திர மஜூம்தார்

குஜராத்திலுள்ள வாலோடில் நடைபெற்ற அகில குஜராத் மாணவர் சாங்கிரஸின் ஐந்தாவது மகாநாட்டிற்கு அனுப்பிய செய்தி.

இன்று உலகில் பரவிக்கொண்டிருக்கும் பயங்கரமான அமைதியின்மைக்கு சமூகச் சுரண்டலே காரணமாகும். இந்தச் சுரண்டலின் உருவம் வர்க்க பேதமே. முதலாளி, தொழிலாளி என்ற இரண்டு வர்க்கங்களாக சமூகம் பிரிக்கப் பட்டிருப்பதன் காரணத்தால், முதலாளி வர்க்கம் தொழிலாளி வர்க்கத்தை இடை விடாமல் சுரண்டிக் கொண்டே இருந்திருக்கிறது. இந்தச் சுரண்டல் முறை புதிது அல்ல. சரீர உழைப்பின் மூலம் உற்பத்தி செய்யக் கூடிய தொழிலாளர்களின் பொருளையும் உழைப்பையும் சுரண்டி வரும் முதலாளித்துவ முறை எப்பொழுது ஆரம்பித்தது என்று நிச்சயம் செய்வது கடினமாகும். ஆனால் இம் முறை அதிகமாக வளர்ந்து விட்டது; இந்தத் தீயின் பொறியால் சமூகம் பஸ்மமாகக் கூடிய நிலையை இன்று உலகம் அடைந்திருக்கிறது.

இந்த நிலைமையிலிருந்து தப்புவதற்கு உலகம் முழுதிலுமுள்ள மனித சமூகம் கூக்குரலிடுகிறது. உலகத்தின் நான்கு பக்கங்களிலிருந்தும் வர்க்கமற்ற சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்து கொண்டிருப்பதற்கு இதுதான் காரணமாகும். இதையெல்லாம் சமூகம் ஒப்புக் கொள்கிறது. தொழிலாளர்களின் தோள்களிலிருந்து முதலாளிகள் கீழே இறங்கி விடவேண்டும் அல்லது தொழிலாளர்கள் முதலாளிகளைத் தங்களின் தோள்களிலிருந்து கீழே தள்ளிவிட வேண்டும்; இம் முறையில் முதலாளித்துவம் அழியவேண்டும் என்பதை சமூகம் அங்கீகரிக்கிறது. இதே சுலோகத்தைத் தான் அவர்கள் கோஷிக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வர்க்க விஷமத்தின் உண்மையான ஸ்வரூபம் தெரிந்திருக்க வேண்டும். சரீர உழைப்பின் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய தொழிலாளிகளின் தோள்களின் மேல் நிர்வாகஸ்தர் என்ற பெயரை யுடைய மத்திய வர்க்கத்தார் அதாவது 'குட்டி முதலாளிகள்' உட்கார்ந்திருக்கிறார்கள்; அவர்களது தோள்களின் மேல் பெரிய முதலாளிகள் உட்கார்ந்திருக்கிறார்கள்; இது தான் சுரண்டலின் உண்மைத் தோற்றமாகும். இன்று இந்த சிறிய முதலாளிகள், தங்களுடைய தோள்களிலிருந்து பெரிய முதலாளிகள் இறங்கி விட வேண்டும், ஆனால் தாங்களோ தொழிலாளர்களின் தோள்களின் மேலேயே உட்கார்ந்திருக்க வேண்டு மென்று விரும்புகிறார்கள். இது நியாயமல்ல, நடைபெறாது. தோளின் மேல் உட்கார்ந்து கொண்டிருப்பதோ அல்லது கீழே இறங்கி விடுவதோ, இரண்டில் ஏதாவது ஒரு வழி தான் உலகில் நடைபெறும். மத்திய வர்க்கத்தார் தொழிலாளர்களின் தோள்களின் மேல் உட்கார்ந்திருக்க வேண்டுமென்று விரும்பினால் அவர்கள் தங்களுடைய தோள்களின் மேல் பெரிய முதலாளிகளை உட்கார வைக்க வேண்டியிருக்கும். ஆனால் அவர்கள் தங்களின் தோள்களின் மேலிருந்து முதலாளிகள் இறங்கவேண்டு மென்று விரும்பினால், தாங்களும் தொழிலாளர்களின் தோள்களிலிருந்து இறங்கி சரீர உழைப்பு வேலை செய்ய வேண்டும்.

மாணவர்களாகிய நீங்களனைவரும் பெரும்பாலும் இந்தச் சிறிய முதலாளி வர்க்கத்தை, அதாவது மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவர்களாவீர். சமூகத்தில் சமத்துவத்திற்கு கௌரவம் ஏற்படவேண்டும் என்று நீங்கள் விரும்பினால், அனைவரும் உங்களுடைய வர்க்கத்தை மாற்றிக் கொண்டு உழைப்பாளியாக வேண்டும்.

இந்த விஷயங்களில் கவனம் செலுத்தி நீங்கள் உங்களது வேலைத் திட்டத்தை நிச்சயிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

கல்வி உலகில் புத்துணர்ச்சி

ஆச்சாரிய விநோபா பாவே

சேவாகிராமத்தில் 1951, மார்ச் மாதத்தில் நடந்த ஏழாவது அகில இந்திய ஆதாரக் கல்வி மகாநாட்டில் பேசியது; சென்ற இதழ் 68-ம் பக்கத் தொடர்ச்சி.

ஆதாரக் கல்விக்கு ஆபத்து

தொழில் என்பது வாழ்க்கையின் ஒரு பகுதி. அதற்குத் தனிச் சிறப்புண்டு. ஆனால் அது உடலைப் போன்றிருக்க, அதற்குள் இருக்கவேண்டிய ஆன்மா ஒன்றுண்டு. அந்த ஆன்மாவை நாம் மறக்கலாகாது. மேல் நாட்டாரும் தொழில் செய்து தான் வருகிறார்கள். ஆகையால் தொழில் என்பதிலிருந்தே அது கல்வி ஆகிவிடாது. கல்வியின் நோக்கம் அதிலிருந்தே கைகூடியதாகாது. ஆகையால் புலனடக்கத்தில் நாம் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். பள்ளிக்கூடத்தின் நடவடிக்கைகளும் சூழ்நிலையும் பிரம்மசரிய ஆசிரம முறையில் அமைய வேண்டும். நான் ஒரு பழய சொல்லை இங்கே உபயோகிக்கிறேன். ஆனால் என் மனதில் பழய காலத்திய நிலை மட்டுமல்ல, தற்காலத்தின் தேவையையும் எண்ணியே நான் இவ்வாறு சொல்கிறேன். பிள்ளைகளை ஏராளமான கட்டுப்பாடுகளுக் குள்ளாக்கி, அவர்கள் இந்தப் பக்கமோ அந்தப் பக்கமோ பார்க்க முடியாமல், 'இந்தத் தொந்தரவு எப்பொழுது தீரும்? இதிலிருந்து எப்பொழுது வெளியேறுவோம்' என்று எண்ணி எண்ணி ஏங்கச் செய்யும் ஏற்பாட்டையல்ல நான் விரும்புவது. பூரண சுதந்திரம் இருக்க வேண்டியதே; ஆனால் எல்லோரும் தாமாக விரும்பி அடக்கத்தை ஏற்று வாழ வேண்டும். இந்த விஷயத்தை நான் அதிகமாக வற்புறுத்த விரும்புவதன் காரணம், நான் ஆங்காங்கு படித்த ஆதாரக் கல்வி பற்றிய கட்டுரைகளில் இந்த விஷயம் வற்புறுத்தப்படாதிருந்ததே. அவைகளிலெல்லாம், தொழிலுடன் அறிவுப் பயிற்சியை இணைப்பது எப்படி என்ற விஷயமே விவரிக்கப் படுகிறது. ஆதாரக் கல்வியும் பிற சாஸ்திரங்களைப் போல சர்ச்சைக்குரிய ஒரு விஷயமாகவே கருதப் பட்டிருக்கிறது. நாம் இவ்வாறு இத்துடன் திருப்தியடைந்து விடுவோமானால் ஆதாரக் கல்வியின் ஜீவனை, அதன் ஆன்மாவை, மறந்தவர்களாவோம்.

இந்தக் கல்வி முறை ஒரு அடக்கம் அளிக்கும் முறையே

இந்தக் கல்வி முறையின் முக்கியமான அம்சம், புலனடக்கத்தை வளர்ப்பதே; புலன்களைத் தம் இஷ்டம் போல் போக விடுவதல்ல. சிறு பிராயம் முதலே நம் குழந்தைகள் தம் புலன்களையும் மனத்தையும் அறிவையும் அடக்கி கட்டுப்பாட்டுக்குள்ளாக்கி வைக்கப் பயிலுவதே இதில் முக்கியமாகும். நம் குழந்தைகள் தம் கருத்துக்களை எப்படி வெளியிடுகிறார்கள், எந்த சொற்களைக் கொண்டு வெளியிடுகிறார்கள் என்று கவனிக்கிறோமே தவிர, அவர்கள் வெளியிடும் முறையில் அடக்கம் புலனாகிறதா இல்லையா என்பதை நாம் கவனிப்பதில்லை. அவர்களுடைய பேச்சிலிருந்து உண்மையில் பற்று விளங்குகிறதா இல்லையா, தாம் வெளியிடும் கருத்துக்கள் மனதிலுள்ளதை அப்படியே விளக்குகின்றனவா இல்லையா என்பதில் அவர்கள் கவனம்செலுத்துகிறார்களா என்றும் நமக்குத் தெரியாது. நாம் இதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும்; அதாவது, பேச்சு அல்லது எழுத்தின் நடையை கவனிப்பதோடு நில்லாமல், நேர்மையையும் கவனிக்க வேண்டும். நடை நேர்மை ஆகிய இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை நீங்கள் உணர வேண்டும்; அதாவது, அவர்களின் பேச்சு எழுத்து ஆகியவற்றின் மூலமாக அவர்களுக்கு உண்மையிலுள்ள பற்றை நம்மால் எடைபோட்டு அறியமுடியவேண்டும். இவ்வாறு மாணவர்களின் நற்குணங்களை வளர்க்கும் விஷயத்தில் நம் கல்வி விசேஷ கவனம் செலுத்த வேண்டும். நம் கல்வியின்

அடிப்படை புலனடக்கமாய் இல்லாதிருக்கும் வரையில் நம் நாட்டிற்கு நன்மையில்லை.

ஏற்கெனவே அரைவயிற்றுச் சோறுதான் கிடைத்துவருவதால், நாம் நாளுக்குநாள் பலவீனராகி வருகிறோம். இன்றுள்ள சூழ்நிலை இனியும் இருந்துவருமானால் நாம் சக்தியற்றவர்களாகிவிடுவோம். நம் சக்தி குறையக் குறைய, நாம் பெற்றுள்ள சுதந்திரம் பெயரளவில் இருந்துவருமே தவிர உண்மையானதாய் இராது. அதனால் நமக்கோ உலகத்திற்கோ நன்மை ஏற்படாது.

ஆதாரக் கல்வி அளிப்பதற்கு பெண்களுக்குள்ள தகுதி

நான் மற்றொரு விஷயத்தையும் சொல்லிவிடுகிறேன். புலனடக்கம் மலிந்த சூழ்நிலையை உண்டாக்கும் பொறுப்பு என்று சொன்னேனே, அதில் நமக்குப் பூரண வெற்றி கிடைக்கவேண்டுமானால் இந்தக் கல்வியை அளிக்கும் பொறுப்பைக் கூடிய வரையில் பெண்களின் கையில் ஒப்புவிக்க வேண்டும். பெண்களை இதற்குத் தகுதி பெறும்படிச் செய்யவேண்டும். முந்தாநாள் சரளாபஹனுடன் பேசிக்கொண்டிருந்தேன். அவர் என்னிடம் பெண்களின் விஷயமாகச் சில கேள்விகள் கேட்டார். நான் அவரிடம் சொன்னதாவது: "எல்லா இடங்களிலும் கஸ்தூரிபா கேந்திரங்கள் அமைத்து, கிராமப் பெண்களுக்கு சேவை செய்ய ஏற்பாடுகள் நடக்கின்றன. நான் கூறும் ஆலோசனை என்னவென்றால், கஸ்தூரிபா நிதி வேலையையும் நம் இந்த ஆதாரக் கல்வி வேலையையும் ஒன்றாக்கி, இந்தியாவிலுள்ள எல்லா பெண்களின் ஸ்தாபனங்களுடனும் நாம் தொடர்பு வைத்துக் கொண்டு எல்லாப் பெண்களையும் சேவைக்கு வரும்படி அழைக்க வேண்டும். பெண்களின் பார்வையில் குழந்தைகள் இருந்து வருவார்களானால் அப்பொழுது சூழ்நிலையில் புலனடக்கம் தானாகவே இருந்து வரும். ஆகவே ஆதாரக் கல்விக்கு நான் கூறக் கூடிய விசேஷ ஆலோசனை இதுவாகும். குழந்தைகள் பயிற்சியின் ஆரம்பக் காலத்தில் தம் தாய்மாரின் பார்வையில் இருக்க வேண்டும். 'தாயுள்ளவன், தந்தையுள்ளவன், ஆசிரியனுள்ளவன்' என்று உபநிஷத்தில் கூறியுள்ளதைப் போல தாய், தந்தை, ஆசிரியர் ஆகியோரிடம் குழந்தை முறையே பயிற்சி பெறவேண்டும். ஆகவே, ஆரம்பக் காலத்தில் தாய் அளிக்கும் கல்வியே முக்கியமாகும். ஆகவே, ஆதாரக் கல்வி முழுதுமே பெண்களால் நடத்தப் படுமானால் அதில் விசேஷ நன்மையுண்டு என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

முற்றிற்று.

யந்திரங்கள்

காந்திஜி

நாம் யந்திரங்களை மேன்மேலும் பெருக்கிக்கொண்டே போவோமானால் அவைகளின் பாதுகாப்புக்காக நம் சக்தியையெல்லாம் செலவிடவேண்டிய மற்றொரு ஆபத்து விளையும். அதாவது இப்பொழுது உலகத்தில் நடந்து வருவதைப்போல் நாமும் பெரிய ராணுவத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டி வரும். விஷயம் என்னவென்றால், வெளியிலிருந்து படையெடுப்பின் பயம் எதுவும் இல்லாதபொழுதும் பெரிய யந்திரங்களை வைத்து நடத்துவோரின் அடிமைகளாக நாம் இருந்துவர நேரும். இந்த அணுகுண்டையே எடுத்துக் கொள்ளுங்கள். நேச நாடுகளினிடையிலேயே அணுகுண்டுள்ள நாடுகளைக் கண்டு மற்றவை அஞ்சுகின்றன.

— 'ராட்டை — தத்துவ விளக்கம்' புத்தகத்திலிருந்து

காந்தியும் மார்க்ஸுமும்

ஆச்சாரிய வினோபா பாவே

ஸ்ரீ கிஷோரிலால் மஷ்ருவாலா சமீபத்தில் வெளியிட்டுள்ள 'காந்தியும் மார்க்ஸுமும்' என்ற புஸ்தகத்திற்கு ஆச்சாரிய வினோபாஜி அளித்துள்ள முகவுரையின் மொழிபெயர்ப்பு இது; சென்ற இதழ் 82-ம் பக்கத்தின் தொடர்ச்சி.

1930–32ல் இந்திய சிறைச்சாலைகள் சத்தியாக்கிரகிகள் நிரம்பப் பெற்றிருந்தன. பைபிள் வேதத்தில் பரபாஸ் என்னும் திருடனை விடுதலை செய்துவிட்டு அவ்விடத்தில் இயேசுவைச் சிலுவையில் அறைய வேண்டுமென ஜனக்கூட்டம் கூச்சலிட்டதாகப் படிக்கிறோம். அது போலவே, அப்போதிருந்த அரசாங்கம் சிறையிலிருந்த குற்றவாளிகளை விடுதலை செய்துவிட்டு சத்தியாக்கிரகிகளை அவ்விடத்தில் அடைத்துவைத்தது. நெருக்கமான அந்த "சீர்திருத்தும்" சிறைச்சாலைக்குள் நடந்தவற்றையெல்லாம் சொல்லி முடியாது; அது கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

அங்கிருந்த சத்தியாக்கிரகிகளிற் சிலர் சோதிட ஆராய்ச்சியி லிறங்கினர். தேசத்தின் விடுதலை தினத்தைத் தேதி குறிப்பிட்டு உறுதி கூறினர். அவர்கள் குறிப்பிட்ட தேதி நிர்ணயம் பன்முறை பொய்த்துப்போன போதிலும், அவர்கள் நம்பிக்கை யிழந்துவிடவில்லை; தங்கள் ஆராய்ச்சியில் முன்னினும் பன்மடங்கு தீவிரமாக முனைந்தனர். அவர்கள் தங்கள் தோல்வியை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அதை அவர்கள் வெகு நாட்களுக்கு மறைக்கமுடியவில்லை. உலக சரித்திரத்தில் நூற்றாண்டுப் போரைப்பற்றிப் படித்திருக்கிறோம். அதையும் மிஞ்சிவிட்டன நமது போராட்டமும் பொறுமையும். சிறைவாசத்தின் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்து கொண்டிருந்தது. எங்களிற் சிலர் மத போதனை ஆராய்ச்சியிலும் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர். சிலர் சமையற்கலை பயிலத் தொடங்கினர். இன்னும் சிலர் இவ்விரண்டிலுமே ஈடுபட்டனர். இவ்வாறு பலரும் தமக்குப் பிடித்தமான வெவ்வேறு துறைகளில் ஈடுபட்டுத் தங்கள் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தனர்.

ஆனால் ஒரு சிலர் மாத்திரம் யாதொரு வேலையிலும் ஈடுபடாமல் வாளாவிருந்தனர். எதிர்காலத்தைக் குறித்து யூகித்துக் கொண்டிருப்பதுதான் இவர்களின் வேலை. தேசத்தையும் உலகத்தையும் பிடித்துக்கொண்டிருக்கும் வியாதியைப் போக்க மாய மருந்து ஏதேனும் உண்டோவென புத்தரைப் போல் சிந்தனையிலாழ்ந்தனர்.

அவர்களில், காந்திய மார்க்கமொன்றே சரியான மருந்து என்பதில் உறுதியான நம்பிக்கையுடைய ஒரு சிலர் ஆத்ம பரிசோதனையிலும் சுய பரிசுத்த முயற்சியிலும் முனைந்தனர். அவர்கள் தங்களுக்குள் சொல்லிக் கொண்டதாவது: "காந்தியமே சரியான வழி என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் நாம் இன்னும் வெற்றி பெருமலிருப்பதற்குக் காரணம் என்ன? நாம் அவ்வழியை விட்டு விலகிப் போய்க் கொண்டிருக்கிறோம். சத்தியாக்கிரகிகள் என்ற அந்தஸ்தோடு சிறைக்கு வந்த நாம் சத்தியத்திற்கு விரோதமாக நடந்துகொண்டு வருகிறோம். கட்டுக்கதைகள் பலவற்றை வெளியே அனுப்பிக் கொண்டிருக்கிறோம். சிறை அதிகாரிகளால் தடை செய்யப்பட்ட பொருள்களை அவை நமக்குத் தேவையாயிருக்கிறதென்று திருட்டுத்தனமாக உள்ளே வரவழைக்கிறோம். இதுதான் நாம் அனுஷ்டிக்கும் சத்தியத்தின் லட்சணமோ? ஒரு சில மாத சிறைவாசத்தைக்கூடத் தாங்க முடியாதிருப்போமானல் நமது வைராக்கியத்தின் வலிமையை என்னென்பது? நம்மில் பெரும்பாலோர் இத்தகைய போலி சத்தியாக்கிரகிகளே! இந்த ஒழுக்கக்குறைவை வைத்துக் கொண்டு வெற்றியை எதிர்பார்ப்பதெங்ஙனம்? ஆகையினல் இனிமேலேனும் சிறைவாசத்தில் கிடைத்த இவ்வரிய சந்தர்ப்பத்தை கடவுளால் ஏவப்பட்டதென்று கொண்டு சரியான வழியில் உபயோகிப்போமாக!" இவ்வாறு

அவர்கள் சொல்லிக்கொண்டு ஒரே உறுதியுடன் தேவைகளைக் குறைத்துக் கொள்ளும் பழக்கத்தை அனுஷ்டிக்கத் தொடங்கினர். சிறையில் ஆற்றவேண்டிய வேலைகளை ஒழுங்காகச் செய்து முடித்தனர். ஓய்வு நேரத்தில் பஞ்சடித்தல், நூற்றல், நெசவு முதலிய வேலைகளில் ஈடுபட்டனர். கக்கூஸ் சுத்தி செய்யும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டனர். இவர்கள் இவ்வாறிருக்க, சிலர் இத்தகைய ஆத்ம பரிசோதனை செய்து கொண்டிருப்பதை அங்கீகரிக்கவில்லை. அவர்கள் கூறியதாவது: "அரசியல் போராட்டங்களில் சத்தியம், அஹிம்சையை நிபந்தனையின்றி ஏற்றுக் கொள்ள வேண்டுமென்கிறீர்கள். உலக சரித்திரத்தில் இதுவரை நடந்த அரசியல் போராட்டங்களில் நம்மைப் போல் இத்தனை கட்டுப்பாடும் ஒழுக்கமும் வேறு எங்கேனும் கடைப்பிடித்ததாக எடுத்துக் காட்ட முடியுமா? மனித இயற்கை சுபாவத்தையே மாற்றியமைப்பதன் மூலந்தான் சத்தியாக்கிரகம் வெற்றியடையும் என்றிருப்போமானால் அந்த வெற்றி ஒரு போதும் கிட்டப்போவதில்லை. அதில் நம்பிக்கை வைப்பது கடைசியில் கானல் நீராகவே முடியும். ஏனெனில், நீங்கள் கூறுவது முற்றிலும் அனுபவ சாத்தியமற்றது. கட்டுப்பாடு, ஒழுக்கம் முதலியவற்றைக் கடைப்பிடிக்க நீங்கள் மக்கள் முன் சமர்ப்பிக்கும் அனுஷ்டான விதிகளுக்கு ஏதேனும் வரையறை யுண்டா? அவற்றை எவ்வளவு காலத்திற்கு அனுஷ்டிக்க வேண்டும்? கொடுங்கோலாட்சிக்கு 'மன மாற்றம்' என்பது எப்பொழுது ஏற்படும்? மக்களின் துன்பத்திற்கோர் முடிவுதான் உண்டா? இவற்றை நாம் சமீப காலத்திற்குள் காணமுடியுமா? நாங்கள் காந்திஜி காட்டிய வழி சென்றோம். வேறொரு மார்க்கம் எங்களுக்குத் தோன்றவில்லை. இந்த வழியே குற்றமற்றதென்று வைத்துக் கொண்டாலும், நமது லட்சியத்தை அடைய அது தவறிவிட்டால் பின்னும் அதையே பின்பற்ற வேண்டும் என்பதற்கு என்ன நியாயம்? நமது நிலைமை இங்ஙனமிருக்க, அதோ, ரஷ்யாவைப் பாருங்கள். கண்ணிமைக்கும் பொழுதிற்குள் அங்கு நிகழ்ந்த பிரமாண்டமான புரட்சியின் வேகந்தான் என்ன! அடையாளம் தெரியாத அளவிற்கு நொடிப் பொழுதில் தேசத்தைப் புனருத்தாரணம் செய்து விட்டார்கள். ஏன், உலகத்தையே திருத்தியமைக்கப் புறப்பட்டு விட்டார்கள். இங்கேயோ இச்சிறைக்குள் அடைபட்டுக் கொண்டு சத்தியம், அஹிம்சை என்று பிதற்றியவண்ணம் சிறையதிகாரிகளின் சட்டதிட்டங்களுக்கு அடங்கிக் கிடக்கிறோம். இது நம்மைக் காப்பாற்றி விடுமா, என்ன? ஒரு சில மாத சிறை வாசத்தைக்கூட தாங்க முடியாதோவெனச் சுட்டிக் காட்டுகிறீர்கள். அதே சமயத்தில் சிறைக் கம்பிகளுக்கு வெளியே தேசமெங்கும் தயாராகக் காத்துக் கொண்டிருக்கும் தொண்டர்களின் சக்தியை குறைத்து மதிப்பிடாதீர்கள். இந்த இயக்கம் வெளியிலும் தீவிரமாகப் பரவுமானால் இன்றைய நிலைமை முற்றிலும் வேறு விதமாயிருக்கும். அதற்குப் பதில் இன்று சுய கட்டுப்பாடு என்னும் ஒழுக்கத்திற்குட்பட்டு சிறைக்குள் அழுந்திக் கிடக்க, வெளியில் கிளர்ச்சி எதுவுமின்றி அமைதியாயிருக்கிறது. வெளியிலும் இயக்கத்தைத் தூண்டாமல் சிறைக்குள் மாத்திரம் ஆத்ம பரிசோதனை செய்து கொண்டிருப்பதன் மூலம் சுயராஜ்யம் கிடைத்துவிடும் என்று உங்களால் உறுதியளிக்க முடியுமா? உம். போனது போகட்டும். இன்னும் வீண் கற்பனை வேண்டாம். இதுவரை நாம் கடைப்பிடித்த வழி தவறுதலானது என்பதை இப்பொழுதேனும் உணர்வோமாக. ஆத்மாவைத் தேடித்திரியும் வீண் முயற்சியில் மூழ்கிப் போகாமல், சரியான வழி எது என்பதைக் கண்டுபிடிப்பதிலே நமது முயற்சியைத் திருப்பிவிடுவோமாக. நமது ஆத்மாவிற்கு என்ன குறை? அது என்றைக்கும் போலவே இன்றைக்குமிருக்கிறது.'' இவ்வாறு மறுதளித்தவண்ணம் அவர்கள் கம்யூனிஸ-சோஷலிஸ நூல்களை அலசிப்பார்க்கத் தொடங்கினர். உலகப் பிரளய காலத்தில் கடல் பொங்கி பூமியை வெள்ளத்தில் மூழ்கடித்தபோது மார்க்கண்டேய மகரிஷி மாத்திரம் நீந்தி மிதந்து கொண்டிருந்தார் என்று புராணம் கூறுகிறது. அதுபோலவே சிறைச்சாலைக்குள் நமது வாலிபத் தோழர்கள் பரவிக் கிடந்த கம்யூனிஸப் பிரசுரங்களாகிய புத்தகக் கடலிடையே நீந்திக் கொண்டிருந்தனர்.

சில இடங்களில் ஆழ்ந்த கருத்துக்களோடும், சில இடங்களில் மேலெழுந்தவாரியான கருத்துக்களோடும் கூடிய இந்தக் கணக்கற்ற புத்தகங்கள் சமுத்திரம்போலவே

விரிந்து கிடக்கின்றன. அவர்களில் ஒரு சிலரே மார்க்ஸ் எழுதிய "முதலீடு" (Capital) என்னும் நூலின் ஆழத்தைக் காண முயற்சித்துக் கொண்டிருந்தனர். பெரும்பாலோர் ரஷ்யாவிலிருந்து ஏராளமாக வெளியாகிக் கொண்டிருக்கும் பகட்டான பிரசாரப் பிரசுரங்களை ஒரு முறை வாசித்ததோடு திருப்தியடைந்தனர். புராண காலத்திற்குப் பிறகு பிரசாரம் செய்வதில் அவ்வளவு உற்சாகம் காட்டுவது கம்யூனிஸ்டுகளென்றுதான் சொல்ல வேண்டும். எத்தனை தடவை வேண்டுமானாலும் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லுவதில் சிறிதும் சளைக்க மாட்டார்கள் போலும்! ஒரு விஷயத்தைப் படிக்கிறவரோ, அதைக் கேட்பவரோ, எவ்வளவு மோசமான ஞாபக சக்தியுடையவரேனும் அவ்விஷயத்தைத் திரும்பத் திரும்ப பன்முறை கூறுவோமானல் அதில் கொஞ்சமேனும் அவருடைய ஞாபகத்தில் பதிந்து விடும் என்ற நம்பிக்கையில் புராண காலத்து ரிஷிகளும் தற்காலத்திய ரஷ்யர்களும் ஒரே மாதிரியானவர்கள் என்று சொல்லலாம். இவ்வுலக வாழ்விற்குப் பின் மோக்ஷமென்னும் புதியதொரு உலகமுண்டு என்ற நம்பிக்கையைப் புகுத்த புராணங்களில் திரும்பத் திரும்ப எழுதப்பட்டிருக்கிறது. அது போல நமது வாலிபத் தோழர்கள் கம்யூனிஸத் தத்துவ நூல்களில் சளையாது ஈடுபட்டிருந்ததன் விளைவாக மோக்ஷம் என்ற அந்த உலகம் ஏற்கெனவே ரஷ்யாவில் வந்து இறங்கி விட்டது என்ற நம்பிக்கை புகுத்தப் பட்டு விட்டார்கள்.

1940-ம் ஆண்டில் நடைபெற்ற "தனிப்பட்டோர் சட்ட மறுப்பு"க் காலத்தில் கிடைத்த என் சிறைவாசத்தின்போது ஒரு கம்யூனிஸ்டு நண்பர் சில கம்யூனிஸ்டுப் பிரசுரங்களைப் படிக்கும்படி தூண்டினர். நூற்பு சமயத்தில் அவற்றை எனக்குப் படித்துக் காட்டும்படி அவரைக் கேட்டுக்கொண்டேன். அவரும் அதற்கிசைந்து தினம் ஒரு மணி நேரம் மார்க்ஸ் எழுதிய நூல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில குறிப்பிட்ட பகுதிகளைப் படித்துக் காண்பித்தார். நான் ஏற்கெனவே மார்க்ஸின் "முதலீடு" (Capital) என்னும் புத்தகத்தை ஒரு முறை படித்திருந்தேனதலின் அவர் படித்த பகுதிகளைப் புரிந்து கொள்ளுவது சிரமமாயில்லை. இவ்வாறு சில மாதங்கள் நடைபெற்றன. அவர் எனக்கு வாசித்துக் காட்டிய பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டவையாயிருந்தும் அவை ஒரே விஷயத்தைத் திரும்பத்திரும்ப ஒப்பிப்பதைப் போலவே எனக்குப் பட்டது. கம்யூனிஸத் தத்துவங்கள் திரும்பத் திரும்பப் புகுத்தப் பட்ட நமது இளைஞர்களின் தலையில் அந்தத் தத்துவங்கள் நிரம்ப பாரமேற்றப்பட்டு விட்டன என்பதில் வியப்பொன்றும் இல்லை.

(தொடரும்)

★ ★ ★

வர்தா

சத்தியன்

காந்தீய நிர்மாணத் திட்ட ஸ்தாபனங்களுக்கெல்லாம் வர்தாவை தேசத்தின் தலைநகரம் என்று கூறலாம். வர்தாவுக்கு வருஷா வருஷம் பயிற்சிக்காகவும் தரிசனத்திற்காகவும் போய்வருகிறார்கள். வர்தாவில் உள்ள ஸ்தாபனங்களையும் அவைகளின் முக்கிய தலைவர்களையும் பற்றி ஸ்ரீ சத்தியன் சமீபத்தில் ஒரு சிறிய பிரசுரம் ஹிந்தியில் வெளியிட்டுள்ளார். அதிலிருந்து ஒரு பகுதியின் மொழிபெயர்ப்பு கீழே காணப்படுவது.

வர்தா, பாரத தேசத்தின் மத்திய பாகத்தில் அமைந்துள்ள ஒரு பெரிய நகரமாகும். இது ஒரு பழய இடம். கோதாவரியில் கலக்கக்கூடிய உபநதிக்கு வர்தா என்ற பெயர் எப்பொழுது கிடைத்தது என்பது தெரியவில்லை. பம்பாய் - கல்கத்தா மெயில், டில்லி - மதராஸ் செல்லும் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் இரண்டும் வர்தா மார்க்கமாகவே செல்கின்றன. வர்தா சமுத்திர மட்டத்திலிருந்து சுமார் 910 அடி உயரத்தில் இருக்கிறது. 35 அங்குலம் முதல் 40 அங்குல மழை பெய்கிறது. மரம் செடிகள் மிகவும் குறைவாக இருப்பதால், இங்குள்ள காற்று எப்பொழுதும் உலர்ந்ததாகவே இருக்கிறது. கோடைக் காலத்தில் கடுமையான உஷ்ணமும் குளிர் காலத்தில் கடுமையான குளிரும் இருக்கிறது. கோடைக் காலத்தில் சாதாரணமாக 110 டிகிரி உஷ்ணம் இருக்கிறது.

வர்தா மத்திய மாகாணத்தின் ஒரு ஜில்லா வாகும். ஹிங்கன்காட், ஆர்வி, வர்தா என்ற மூன்று தாலுகாக்கள் இருக்கின்றன. வர்தா தாலுகாவில் 300 கிராமங்கள் இருக்கின்றன. ஜனத்தொகை ஒன்றரை லட்சத்திற்கும் அதிகம். வர்தா நகரத்தின் ஜனத்தொகை நாற்பதினுயிரம் முதல் ஐம்பதினுயிரம் வரை இருக்கிறது. முன்பு வர்தாவின் பெயர் பாலக்வாடி என்றிருந்தது. பருத்தி, சோளம், வாழை, ஆரஞ்சு, அல்ஸி விதை முதலியவை அங்கு விளையக்கூடிய முக்கிய பொருள்கள். ரயில்வே ஜங்ஷன் இருப்பதன் காரணத்தால் இது முக்கிய வியாபார ஸ்தலமாக இருக்கிறது. வர்தா இன்று இவ்வளவு தூரம் பிரசித்தியடைந்ததற்கு சேட் ஸ்ரீ ஜம்னுலால்ஜி தான் காரணஸ்தர். இவர் அரசியல் காரியங்களில் ஈடுபட்ட காலத்தில் இவரது உழைப்பினல் தேச சேவைக்கான காரியங்கள் வர்தாவில் நடக்க ஆரம்பித்தன. எல்லாவற்றிற்கும் முன்பாக 1921-வது வர்தாவில் "சத்தியாக்கிரக ஆசிரமம்" ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்ரீ விநோபாஜி அதன் நிர்வாகியாக இருந்தார். அதன் பின்னர், ஜம்னுலால்ஜியின் விருப்பப்படி, விநோபாஜியின் உதவியுடன் "கன்யா ஆசிரமம்" என்ற பெயருடைய ஒரு ஸ்தாபனம் நிறுவப்பட்டது. சத்தியாக்கிரக ஆசிரமமும், கன்யா ஆசிரமமும் 1935-வரையில் நடந்தன. இதைத் தவிர ராஷ்ட்ரீய வித்தியாலயம், மார்வாடி வித்தியாலயம் என்பவையும் நடைபெற்றன. ராஷ்ட்ரீய வித்தியாலயம் விநோபாஜியின் மேற்பார்வையில் ஆசிரமம் மூலமாக நடைபெற்று வந்தது. இன்று அந்த எல்லா ஸ்தாபனங்களும் மூலப்பெயரில் இல்லை. அவைகளின் பெயரும் ரூபமும் மாறிவிட்டது. ஜம்னுலால்ஜி, விநோபாஜி முதலியவர்களைப் போன்றே ஸ்ரீ ஜாஜுஜியும் வர்தாவின் பழுத்த ஊழியராவார்.

1934-லிருந்து மகாத்மா காந்தி வர்தாவில் வந்து வசிக்கலானர். காந்திஜி வந்த பிறகு வர்தாவிலுள்ள பழய ஸ்தாபனங்களில் மாறுதல் ஏற்பட்டதைத் தவிர, சில புதிய ஸ்தாபனங்களும் தோன்றின; அவற்றிற்குப் புதிய புதிய தொண்டர்களும் தயாரானர்கள். இன்று வர்தாவிலும், அதற்குப் பக்கத்திலுள்ள கிராமங்களிலும் சேர்ந்து கீழ்க்கண்ட ஸ்தாபனங்கள் வேலை செய்து கொண்டிருக்கின்றன: (1) மகன்வாடி, (2) காந்தி சேவா சங்கம் (3) கஸ்தூரிபா தேசீய ஞாபகார்த்த நிதி (4) ராஷ்ட்ரபாஷா பிரசார சபை (5) ஹிந்துஸ்தானி பிரசார சபை (6) மஹிளாஸ்ரமம் (7) கோபுரி (8) நால்வாடி (9) தத்தபுர் (10) பவனர் (11) சுர்காம் (12) சர்க்கா சங்கம் (13) கஸ்தூரிபா ஞாபகார்த்த ஆஸ்பத்திரி (14) ஹிந்துஸ்தானி தாலிமி சங்கம் (15) சேவா கிராம ஆசிரமம் (16) சேவாகிராமத்தின் சம்பூரண கிராம சேவை வேலை (17) சர்வ சேவா சங்கம் (18) ஸர்வோதய சமாஜம் (19) கோ சேவா சங்கம்; இவை பத்தொன்பதும் முக்கியமானவை; இவைகளைத் தவிர ஹரிஜனக் குழந்தைகளுக்காக ஹரிஜன உணவு விடுதி, மார்வாடி கல்விக் கழகத்தின் மூலமாக வர்த்தகக் கல்லூரி முதலிய ஸ்தாபனங்களும் வர்தாவில் நடைபெறுகின்றன. மேலே கூறிய பத்தொன்பது ஸ்தாபனங்களும் ஒன்றுக்கொன்று சுதந்திரமாக இருந்த போதிலும், 'கண்ணிரண்டு பார்வை ஒன்றே' என்ற நியதியில் காந்தீயத் தத்துவப் பிரசாரத்தை நடத்தி வருகின்றன. இனி நாம் ஒவ்வொரு ஸ்தாபனத்தைப் பற்றியும் தனித்தனியாக ஆராய்வோம்.

மகன்வாடி:- இந்த ஸ்தாபனம் வர்தா ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 5-நிமிஷத்தில் கால் நடையாகப் போகக்கூடிய தூரத்தில் உள்ளது. இது முதலில் சேட் ஜம்னுலால்ஜியின் தோட்டமாக இருந்தது. 1921 முதல் 1923 வரை சத்தியாக்கிரக ஆசிரமம் இங்கு தான் இருந்தது. 1935-வது வருஷத்திலிருந்து இது கிராமக் கைத்தொழில் சங்கத்தின் தலைமைக் காரியாலயமாக இருந்துவருகிறது. இங்கு கிராமக் கைத்தொழில் சங்கத்தின் கீழ்க்கண்ட முக்கிய வேலைகள் நடைபெறுகின்றன: செக்கில் எண்ணை ஆட்டுதல், காகிதம் செய்தல், தேனீ வளர்த்தல், மண் பாண்ட வேலை, 'மகன் அடுப்பு' தயாரித்தல், சோப்பு தயாரித்தல், 'மகன் தீபம்' தயாரித்தல் முதலியன. இங்கு ஒரு ஆராய்ச்சி நிலையமும் இருக்கிறது. இந்த எல்லாத் தொழில்களையும் கற்பதற்கு சரியான ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் இந்தியாவின் வெவ்வேறு மாகாணங்களிலிருந்து மாணவர்கள் வெவ்வேறு கிராமக் கைத்தொழில்களை கற்றுக் கொள்

வதற்காக வருகிறார்கள். இதற்காக மகன் வாடியில் ஒரு தனியான வித்தியாலயமும் மாணவர் விடுதியும் இருக்கின்றன. சபர்மதி ஆசிரமத்தின் முக்கிய நிர்வாகியாக இருந்த காலஞ்சென்ற மகன்லால் காந்தியின் ஞாபகார்த்தமாக "மகன் சங்க்ரஹாலயம்" என்ற கண்காட்சிச்சாலையும் மகன்வாடியில் இருக்கிறது. அதில் கதர் கிராமக் கைத்தொழில் பொருள்கள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. கிராமக் கைத்தொழில் சங்கம் ஆரம்பித்த பிறகு ஏறக்குறைய ஒரு வருடம் வரை காந்திஜி மகன்வாடியில் இருந்தார். அந்தச் சமயத்தில்தான் மகன்வாடிக்குப் பக்கத்திலுள்ள சிந்தி கிராமத்தில் மீராபஹன், மகாதேவ தேசாய் முதலியவர்கள் துப்புரவு வேலை ஆரம்பித்தார்கள். அந்நாட்களில் அதைப்பற்றி "ஹரிஜனி"ல் ஏராளமான கட்டுரைகள் வந்திருக்கின்றன. அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கத்தின் நிர்வாகியும் தலைவருமான ஸ்ரீ ஜே. ஸி. குமரப்பா மகன் வாடியில் தான் இருக்கிறார். இங்கிருந்து "கிராம உத்தியோக் பத்ரிகா" என்ற மாதப் பத்திரிகை ஆங்கிலத்திலும், ஹிந்தியிலும் வெளியாகிறது. சென்ற இரண்டு வருடமாக இங்கு 'கிராம உத்தியோக் நயீதாலிம்' என்ற பயிற்சிச் சாலையும் நடைபெறுகிறது.

பஜாஜ்வாடி :- சேட் ஜம்னாலால்ஜியின் பங்களா, விருந்தினர் விடுதி, காந்தி சேவா சங்கத்தின் தலைமைக் காரியாலயம், கஸ்தூரிபா ஞாபகார்த்த நிதியின் தலைமைக் காரியாலயம், சில முக்கியஸ்தர்களின் இருப்பிடம் முதலியவை இங்கு இருக்கின்றன. ஸ்ரீ கிஷோரிலால் மஷ்ருவாலா தற்பொழுது இங்கிருந்துதான் "ஹரிஜன்" பத்திரிகையை நடத்திக்கொண்டிருக்கிறார். பஜாஜ்வாடி வர்தா நகரத்தின் ஒரு பகுதியாகும். இங்குள்ள விருந்தினர் விடுதி காலஞ்சென்ற ஜம்னாலால் பஜாஜின் செலவில் வெளியிலிருந்து வரும் விருந்தினர்களுக்காக நடைபெறுகிறது. காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர்கள் வர்தாவுக்கு வரும்பொழுது பெரும்பாலும் இங்கேயே தங்குகிறார்கள். வர்தாவில் காரியக் கமிட்டிக் கூட்டங்கள் பெரும்பாலும் இங்கேயே நடைபெற்றன. தேசத்தில் காந்தீயக் கருத்துக்களைப் பரப்புவதும், கிராமங்களில் நிர்மாண வேலைகள் செய்வதும் காந்தி சேவா சங்கத்தின் நோக்கமாகும். காந்தி சேவா சங்கத்தின் வேலை ஏறக்குறைய நின்றுபோனதுபோல் இருக்கிறது. கஸ்தூரிபா ஞாபகார்த்த நிதியின் மூலமாக தேசத்தின் வெவ்வேறு பகுதிகளில் சேவை நடைபெறுகிறது. அதன் தலைமைக் காரியாலயம் 1951 வருடம்வரை இங்குதான் இருந்தது. இந்த எல்லா வேலைகளையும் தவிர, "கிராம சேவா மண்டல்" உபகரணத் தொழிற்சாலையின் இரும்பு வேலையும் இங்குதான் நடைபெறுகிறது.

(தொடரும்)

ஸர்வோதயத்தின் அஸ்திவாரம்

(104-ம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களிலும் இருப்பது நானே யென்றால், பொய் நடத்தை எவ்வாறு பொருந்தும்? உண்மையை மறைப்பது எவ்வாறு தகுதியாகும்? யாரிடமிருந்து மறைப்பது? ஒருவரிடமிருந்து மறைப்பதென்றால் அவரும் நானேதானல்லவா? இந்தப் பெருத்த சத்திய விரதத்தினாலேயே ஸர்வோதய சமாஜத்தில் சேரக்கூடியவர்கள் பலரிருக்க மாட்டார்களென்று சிலர் சொல்லுகிறார்கள். இவ்வாறு சொல்கிறவர்கள் தம்மையே கடவுள் ஸ்தானத்தில் இருப்பதாக எண்ணுகிறார்களென்று சொல்வேன். நான் கடவுளின் இடத்தை ஏற்க முடியாது. எல்லா மனிதர்களுக்குமே நல்ல எண்ணங்கள் இருக்க மாட்டாவென்று ஏன் சொல்லவேண்டும்? இருக்குமென்றே நான் நம்புவேன். எவருக்கும் இந்த உயர்ந்த நோக்கமில்லாமலேயிருந்து இந்த ஸர்வோதய சமாஜமென்பது வெறும் மனக் கோட்டையாகவே இருந்து வருமானால் இந்த மனக் கோட்டையினாலேயே உலகிற்கு நன்மைகள் விளையும். இதற்கு மாறாக, உண்மையில் பற்றில்லாத கோடி கோடி அங்கத்தினர் ஒரு ஸ்தாபனத்தில் சேர்ந்திருந்த போதிலும் அதனால் உலகத்திற்குத் தினையளவு நன்மையும் ஏற்படப் போவதில்லை.

வினோபா

★ பூமி தான யக்ஞம் ★

‘கிராமத்திற்கு ஒரு கோகுலம்’

ஆச்சாரிய விநோபா பாவே

127784

சரித்திரத்தின் தேவை

நிலமிருப்பவர்கள் தங்கள் நிலத்தை நிலமில்லாதவர்களுக்கு இஷ்டப்பட்டுக் கொடுக்கவேண்டும் என்ற என்னுடைய முயற்சி சரித்திரப் பிரவாகத்திற்கு விரோதமானது என்பதை நான் மறுக்கிறேன். சரித்திரத்தில் நடந்தவைகளைக் காட்டிலும் தனியான காரியங்களும் நடைபெறக்கூடும். ரஷ்யப் புரட்சியைப் போன்றதொரு சம்பவம் முன்பு நடைபெற்றதில்லை, ஆனால் அது நடைபெற்றது. அம்மாதிரியே நான் எடுத்திருக்கும் வேலையும் நடைபெறக்கூடும். நான் செய்துகொண்டிருக்கும் வேலை சரித்திரப் பிரவாகத்திற்கு விரோதமானது அல்ல, ஆனால் அது சரித்திரத்தின் தேவையும் காலத்தின் கோரிக்கையுமாகும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

புரட்சி – ஆனால் அஹிம்சா புரட்சி வேண்டும்

புரட்சியைத் தவிர்ப்பது என்பது என்னுடைய நோக்கமல்ல. நான் ஹிம்சைப் புரட்சியிலிருந்து தேசத்தைக் காப்பாற்றி, அஹிம்சைப் புரட்சியைக் கொண்டுவர விரும்புகிறேன். நம்முடைய தேசத்தின் எதிர்கால சுகமும் அமைதியும் நிலப் பிரசினையை அமைதியான முறையில் தீர்ப்பதைப் பொறுத்திருக்கிறது. சட்டத்தின் கட்டுப்பாடுகளால் நம்முடைய வேலை தடைப்படாமல் இருக்கும்படியான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த நான் முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். நான் பணக்காரர்களிடமிருந்து நேரிடையாக நிலத்தைப் பெற்று ஏழைகளுக்கு நேரிடையாகக் கொடுத்துவிடுகிறேன். ஜமீந்தார்களுக்கு முழு நஷ்டஈடும் கிடைக்காது, அவர்களுக்குப் போதுமான நிலத்தை எடுத்துக்கொண்டு சந்தோஷமடைய வேண்டும் என்ற விஷயத்தில் அவர்கள் சம்மதம் கொடுக்கச்செய்ய முடியும்.

சட்டம் மாறுதலுக்கு சூழ்நிலை

“சட்டத்தை என் மாற்றக்கூடாது?” என்று ஒரு நிருபர் கேட்டார். இதற்கு நீதி சம்பந்தமான விஷயத்தில் ஜமீந்தார்களின் ஒத்துழைப்பைப் பெறவேண்டும்.

சட்டத்தை ஜனங்களின் மேல் சுமத்தக் கூடாது. சட்டத்துடன் அனைவரின் ஒத்துழைப்பும் இருக்கவேண்டும் என்பது என் பதில்.

கோரிக்கை நியாயந்தான்

(நடைமுறை ஏற்பாட்டில் யாருக்கு சுய நலம் இருக்கிறதோ அவர்கள் தங்களுக்கு முடிவு தாங்களே செய்துகொள்ளவேண்டுமென்ற மனப்பான்மை ஏற்படுகிறதில்லை என்று மற்றொரு நிருபர் கேட்டார்.)

பதில்:- மனோதத்துவத்தின் இக்கருத்து சரியானது என்று நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். நிலச்சுவான்தார்கள் தாங்களாகவே விரும்பி தங்களின் நிலத்தை நிலமில்லாதவர்களுக்குக் கொடுக்காவிட்டாலோ, நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்கு அனுகூலமான சூழ்நிலையை ஏற்படுத்தாவிட்டாலோ, மூன்றாவது மார்க்கம் ஹிம்சைப் புரட்சியேயாகும் இப்படிப்பட்ட ஹிம்சைப் புரட்சியைத் தடுப்பதுதான் என்னுடைய முயற்சி. தெலுங்கானாவிலும், உத்தரப் பிரதேசத்திலும் எனக்குக் கிடைத்த அனுபவத்திற்குப் பிறகு, அமைதியான முறைகளில் கிடைக்கும் வெற்றியில் எனது நம்பிக்கை மேலும் திடமாகியிருக்கிறது. காற்று, வெளிச்சம், தண்ணீர் முதலியவைகளைப் போன்று நிலமும் பகவான் கொடுத்த கொடையாகும். நிலமில்லாதவர்களின் சார்பில் அவர்களுக்காக நான் கேட்பது நியாயத்திற்கு கொஞ்சமும் அதிகமானது அல்ல.

மூன்றுவிதப் புரட்சி மார்க்கம்

நான் செய்வதெல்லாம் என்ன? என்னுடைய நோக்கம் என்ன? நான் மாறுதலை விரும்புகிறேன். முதலில் இதய மாற்றம் (மனமாற்றம்). இரண்டாவது, வாழ்க்கையில் மாறுதல். பின்னர் சமூக அமைப்பில் மாறுதல் கொண்டுவர விரும்புகிறேன். இம்மாதிரியான மூன்று விதப் புரட்சி (மாறுதல்) என் மனதில் இருக்கிறது.

.... இம்மாதிரி அரசியல், சமூகப் புரட்சி செய்வதற்கு மனப்பான்மையை மாற்றி விடுவதற்குரிய அவசியம் ஏற்படுகிறது. இந்த வேலை சண்டைகளினாலோ அல்லது ஹிம்சைப் புரட்சிகளினாலோ நடைபெறாது. யுத்தங்களினாலும் புரட்சிகளினாலும் செய்ய முடியாத வேலையை புத்தர், ஏசு, ராமானுஜர் போன்ற மகாபுருஷர்கள் செய்தார்கள். இந்த வேலை அவர்களினுடைய முறையினால் நடைபெறும். கடைசியாக நான் விரும்புவது தானமே; அனைவரின் நன்மைக்காகத் தன்னுடையதை அர்ப்பணம் செய்து விட வேண்டும்.

சட்டம் எப்பொழுது?

.... நான் "தரித்திரநாராயணர்"களின் சார்பில் தானம் கேட்டுக் கொண்டிருக்கவில்லை, ஆனால் அவர்களுடைய உரிமையைத் தான் கேட்டுக்கொண் டிருக்கிறேன் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். நிலம் தானம் பெற்று சேகரிப்பது என்பது மட்டும் எனது வேலை அல்ல. நிலச் சுவான்தார்கள் தங்கள் நிலத்தின் ஒரு பாகத்தை தானமாகக் கொடுத்துவிட வேண்டும் என்பதை அவர்களுக்குப் புரியவைப்பதற்கு முயற்சி செய்துகொண் டிருக்கிறேன். நிலமில்லாதவர்களுக்கு நிலத்தில் உரிமை இருக்கிறது என்ற விஷயம் ஒரு தடவை அவர்களின் கவனத்திற்கு வந்துவிட்டால் பின்னர் தகுதியான சட்டம் ஏற்படுவதற்கு அனுகூலமான சூழ்நிலை ஏற்பட்டுவிடும். இம்மாதிரி சூழ்நிலை அமைந்தவுடன் ஏற்படும் சட்டமே வெற்றி பெறும். ஏனென்றால் மக்கள் அதை ஏற்றுக் கொள்வார்கள். பின்னர் நம்முடைய லட்சியத்தின் பிரகாரம் ஐந்து கோடி ஏக்கரில் இருபதில் ஒரு பாகம் கூடப் பூர்த்தியடையாவிட்டாலும் சரி.

என்னுடைய சட்டமும் கம்யூனிஸ்டுகளின் சட்டமும்

காலையில் சகோதரர் ஒருவர் வந்து, "தங்களின் வேலைத் திட்டம் நல்லதுதான், ஆனால் அது எப்பொழுது பூர்த்தியடையும் என்பதைச் சொல்லமுடியாது" என்று உற்சாகத்துடன் கூறலானார். "சட்டத்தின் மூலம் மிக விரைவில் பூர்த்தியடையக் கூடும், பூர்த்தியாகவும் வேண்டும்" என்றும் கூறினார். என்னுடைய திட்டம் அஹிம்சையின் திட்டம் என்று நான் கூறினேன். அஹிம்சைத் திட்டத்தில் சட்டம் ஏற்படாது என்பதல்ல. ஆனால் அதற்கு முன்பு ஜனங்களின் அபிப்பிராயம் தெரியவேண்டும். அதற்காக முதலில் சூழ்நிலை ஏற்படுத்தப்படுகிறது. அதிக மானவர்களின் மனப்பூர்வமான சம்மதம் கிடைக்கும்போது அந்நிலையில் யாராவது சிலர் எதிர்த்தார்களானால் அப்பொழுது சட்டம் உதவிக்காக வரக்கூடும். என்னுடைய திட்டத்தில் இவை யாவும் அடங்கியுள்ளன. சட்டத்தைக் கம்யூனிஸ்டுகளும் விரும்புகிறார்கள். அவர்களின் திட்டத்திலும் சட்டம் இருக்கிறது. ஆனால் அது முதலில் கொலையினால் ஆரம்பமாகிறது; பின்னர் அவர்கள் சட்டம் இயற்றும்போது அந்தச் சட்டத்திற்கும் கொலையின் வர்ணம் வந்துவிடுகிறது. எனது வேலையும் சட்டத்தினால் முடிவடையும், ஆனால் அது கருணையினால் ஆரம்பமாகிறது. மக்களுக்கு எல்லா விஷயங்களையும் அமைதியாகப் புரியவைக்கப்படுகிறது. நாம் சொல்கிற விஷயங்களில் நியாயம் இருக்கிறது, இப்பொழுதுள்ள நிலைமையில் நியாயம் இல்லை, பாதுகாப்பும் இல்லையென்பதை மக்கள் ஏற்றுக்கொள்ளும்போது, என்னுடைய வேலை பூர்த்தியடையும். இம்மாதிரி இந்த வேலை கருணையினால் ஆரம்பித்து அஹிம்சை முறைகளில் நடைபெறுகிறது. சூழ்நிலை தயாராகும்போது சட்டம் உதவிக்காக வருகிறது.

மகா கவியின் அழியா வாக்கு

காற்று, தண்ணீர், வெளிச்சம் முதலியவை ஈசுவரனின் கொடையாகும். அதில் எந்தவிதமான வித்தியாசமும் பாராட்டுகிறதில்லை. இதைப்போன்றே நிலமும் ஈசுவரனால் கொடுக்கப்பட்ட கொடை என்று அநேகம் தடவைகள் திரும்பத்திரும்பக் கூறியுள்ளேன். இந்தக்கருத்தை ஹிந்தி மகாகவி மைதிலி ஷரண் குப்தா ஒரு கவியில் நல்ல முறையில் வெளிப்படுத்தியிருக்கிறார்; இது பூமி தான வேள்வியைத் தொடர்ந்து எழுதப்பட்டிருக்கிறது.

தானம் அதாவது நியாயத்தின் உரிமை

என்னுடைய திட்டம் முதலில் தானம் பெறும் திட்டமாக இருந்தது, இப்பொழுது நான் உரிமையைக் கேட்கிறேன் என்று சிலர் சொல்லுகிறார்கள். நான் முதலிலிருந்தே நியாயம், உரிமை என்ற அடைப்படையில்

இதைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். நியாயம் அதாவது சட்ட நியாயம் அல்ல, ஈசுவரனின் நியாயமாகும். நான் சுயராஜ்ய சாஸ்திரம் என்ற சிறிய புத்தகம் எழுதியிருக்கிறேன். அதில் இவ்விஷயம் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இருபது வருடங்களுக்கு முன்பும் ஜெயிலில் ஸானே குருஜி என்பவரிடம் நாம் சட்டத்தின் மூலம் நிலத்தைப் பங்கிட வேண்டும் என்று கூறினேன்.

சட்டம் அஹிம்சையினுடையதா, அல்லது பலாத்காரத்தினுடையதா?

பலாத்காரத்திற்கும் ஹிம்சைக்கும் பிரதிநிதியான ஒரு சட்டம் இருக்கிறது. மற்றொன்று அஹிம்சைக்கும் பிரதிநிதியாகும். நான் இரண்டாவது சட்டத்திற்கு முகவுரை தயாரித்துக் கொண்டிருக்கிறேன். இம்மாதிரி வேலைகளில் ஆரம்பத்தில் பிரசாரத்தின் வேகம் மெதுவாக இருக்கிறது. அஹிம்சை முறையில் இப்படித்தான் நடைபெறுகிறது. ஆனல் பார்த்துக்கொண்டிருக்கும்போதே காற்றில் விஷயம் பரவி விடுகிறது. இப்பொழுது விஷயம் பரவி விட்டது. பரவிவிடும்போது வேலை நடைபெறுவதில் தாமதம் ஏற்படாது. நாம் அனைவரும் வேலை செய்ய ஆரம்பித்தால் இந்த வேலை நடைபெறுவதற்கு ஐம்பது வருடங்கள் ஆகத் தேவையில்லை. ஒரே வருடத்தில்கூட நடைபெறக்கூடும். நம்முடைய ஆண்மை (சாமர்த்தியம்) எவ்வளவு, புரிய வைக்கக்கூடிய சக்தி எவ்வளவு, தியாக சக்தி எவ்வளவு இவைகள் எல்லாவற்றின் பலனும் நமது வேலையில் ஏற்படுகிறது.

விளங்கவைப்பதன் மூலம் சுலபமாக வேலை யாகிறதைப்போன்று பலாத்காரத்தினல் ஆவதில்லை. பலாத்காரத்தின் மூலம் எனக்கு தானம் வேண்டியதில்லையென்று நான் அநேக தடவைகள் கூறியிருக்கிறேன். எனக்கு தூய்மையில்லாத களங்கமுற்ற தானம் தேவையில்லை, சுத்தமான தானம் வேண்டும். ஒருவருக்கும் கெடுதல் செய்யாமல், அனைவரின் நன்மையையும் விரும்பி, சுயநலத்தைப் பாராமல் ஸர்வோதய நோக்குடன் பார்த்தால் நம்முடைய வேலை எதிர் பார்த்த அளவு சீக்கிரம் நடைபெறும்.

நஷ்டஈடுப் பிரசினைக்கு அஹிம்சைப் பரிகாரம்

இன்றுள்ள சட்டம், அரசியல் அமைப்பு விதியின் பிரகாரம் நஷ்டஈடு கொடுத்து நிலத்தை எடுத்துக்கொள்ள முடியும். இருக்கும் சட்டம் சரியானது. நஷ்டஈடு பெற்றுக் கொள்ளுபவர்கள் நஷ்டஈடு பெற்றுக் கொள்ளத்தான் வேண்டும், கொடுப்பவர்கள் கொடுக்கத்தான் வேண்டும் என்பது அஹிம்சை முறையில் இல்லை. இதிலோ, ஜமீந்தார்கள், நிலச்சுவான்தார்கள், விவசாயி ஆகிய நம் சகோதரர்கள் இருக்கிருர்கள். அவர்களின் வேலை நடைபெறுவதுடன்கூட ஏழைகளுக்கு நியாயமும் கிடைக்கவேண்டும். பதினயிரம் ஏக்கர் நிலமுள்ள சகோதரருக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படவில்லை யென்றல், அது ஹிம்சை என்று சொல்லப்படமாட்டாது. பெரிய விவசாயி, ஜமீந்தார், நிலச்சுவான்தார் முதலியோர் சரியான கணக்கில் நஷ்ட ஈடு பெறவேண்டும் என்ற அவசியம் இல்லை. எவ்வளவு தேவையோ அவ்வளவு மட்டும் பெற்றுக்கொள்ளும்படி உணரச் செய்யமுடியும் என்று நம்புகிறேன். ஆகையால் நான் நஷ்டஈட்டையும் தானமாக வாங்குகிறேன். ஏனென்றல் பரமேசுவரனின் படைப்பில் இருக்கும் திறமையை நான் போஷிக்க விரும்புகிறேன். நான் நிலமில்லாதவர்களுக்கு நிலம் கொடுக்க விரும்புகிறேன். ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு குடும்பமாகி, அனைவரும் சேர்ந்து, உழுது, உற்பத்தி செய்து, உண்டு வாழ்ந்திருக்க வேண்டுமென்பது எனது கடைசி விருப்பமாகும். ஒவ்வொரு கிராமமும் கோகுலமாகவேண்டும் என்று விரும்புகிறேன். கோகுலத்தில் முன்பு என்ன நடந்து கொண்டிருந்தது? அனைவரும் ஒரு குடும்பத்தினரைப் போன்று உண்டு வாழ்ந்து வந்தார்கள். இந்த வேலைகள் எல்லாவற்றையும் புரிந்து கொண்டு செய்ய வேண்டும்.

அசுவமேத யாகம்

இரண்டாயிரத்து ஐநூறு வருடங்களாகப் பிரசித்தி பெற்ற இந்த யமுனை தீரத்தில் அசுவமேத யாகக் குதிரையைப் போன்று நானும் பூமிதான யாகக் குதிரையாகச் சுற்றிக் கொண்டிருக்கிறேன்.

உணவுப் பெருக்கமும் மக்கட் பெருக்கமும்

காகா கலேல்கர்

உலகில் உள்ள பிராணிகள் அனைத்திலும் மனிதன் ஒருவனே கணித சாஸ்திரத்தை அறிந்தவனாக இருக்கிறான். இந்த ஒரே சாஸ்திரத்தின் உதவியால் அவன் பரிசோதனைகளும் சாதனைகளும் செய்து, உலகின் ரகசியத்தையும், இயற்கையின் சக்தியையும் அறிந்துகொள்கிறான். கணித சாஸ்திரத்தில் தேர்ச்சிபெறாத நாடு முன்னேற்றம் அடைய முடியாது; கொஞ்சம் கொஞ்சமாக அது நசித்துவிடும்.

கணித உதவியால்தான் நாம் ஒவ்வொரு நாட்டின் உணவு உற்பத்தியையும், மக்கட் பிறப்பையும் கணக்கிட முடிகிறது. ஜனத்தொகை பெருகி உணவு உற்பத்தி குறையுமானால் சுதந்திரம் அழிந்துவிடும்; ஆரோக்கியம் குன்றிவிடும்; சாமர்த்தியம் நசித்துவிடும்; கடைசியில் நமது மனிதத் தன்மையே ஒழிந்துவிடும் என்பதை நாம் கண்டுகொண்டிருக்கிறோம்.

உணவு குறைந்துவிட்டால் மக்கட் பேற்றைக் குறைத்துக்கொள்ளுங்கள் என்கின்றனர் தற்காலத்துக் குருட்டு 'சமூகப் பேரறிஞர்கள்'! இம்முறை தவறு. உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும். உணவு உற்பத்தி பெருகுமானால் மக்கட் பெருக்கம் தானாகவே குறைவுபடும்.

பலவீனமான ஆண் பெண்களின் பிரஜைகள் அழியத் தொடங்குமுன் அந்த ஜாதியை நிலைநிறுத்த இயற்கை அந்த ஜாதிகளுக்கு மக்கட்பேறை அதிகரிக்கச் செய்கிறது. பல மக்கள் இறந்தாலும் சில குழந்தைகளாவது உயிருடன் தப்பி அந்த ஜாதி அழியாமல் இருக்கவேண்டும் என்பதே இயற்கையின் நியதி. ஆனால் ஆண் பெண்கள் பலமுடையவர்களாக இருந்து, அவர்களது குழந்தைகளும் பலசாலிகளாக இருந்தால் தானாகவே மக்கட்பேறு குறையத் தொடங்குகிறது.

அறிவும் பண்பும் மேன்மையடைந்து வாழ்வில் பற்பல சௌகரியங்கள் ஏற்படும் போதும் மக்கட்பேறு ஒரு கட்டுக்குட்படுகிறது.

இந்த நியதி ஒரு தனிப்பட்ட மனிதனையோ தனிக் குடும்பத்தையோ பார்ப்பதனால் விளங்க முடியாது. நாடு முழுதிலும் பற்பல காலங்களில் கிடைக்கும் புள்ளிவிவரங்களைப் பார்த்தால் இது நன்கு புலனாகும்.

கர்ப்பத்தடை என்ற புது நாகரிக முறையை ஆபத்துக் காலத்தின் தர்மம் என்று கொண்ட போதிலும், அது கொடிய அபாயத்திற்குள்ளாக்கும் என்பதை அறியவேண்டும். சில அமானுஷ்யமான பேர்வழிகளுக்கும், கெட்ட பழக்கவழக்க முள்ளவர்களுக்கும் இம்முறை சிறிது உதவக்கூடும். ஆனால் சமூகத்தில் வேரூன்றிய பின்னர் இம்முறை எண்ணற்ற அபாயங்களை ஏற்படுத்தும் என்பதை மறக்கக்கூடாது.

''மங்கள் பிரபாத்'', நவம்பர் '51

(முன்பக்கத் தொடர்ச்சி)

பிரஜா ஸூய யாகம்

மகாபாரதத்தில் ராஜஸூய யாகம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. எனது யாகம் பிரஜா ஸூய யாகமாகும். இதில் பிரஜைகளுக்கு முடி சூட்டப்படும். தொழிலாளர், குடியானவர், தோட்டி முதலிய அனைவரும் இந்த ராஜ்யத்தில் நமக்காக சில காரியங்கள் நடந்திருக்கின்றன என்று எண்ணட்டும். இப்படிப்பட்ட சமூகத்தின் பெயர்தான் ஸர்வோதயம். அங்கிருந்து தூண்டுதல் பெற்றுத் தான் நான் சுற்றிக்கொண்டிருக்கிறேன்.

(டில்லியில் காந்திஜி சமாதியில் சென்ற டிசம்பர் மாதம் பேசியதின் சாரம்)

''ஸர்வோதயம்'', டிசம்பர் '51

★ ஸர்வோதய சமாஜத்தின் உண்மைப் பொருள் ★

வெவ்வேறு அம்சமே, வெவ்வேறு கருத்தல்ல

ஸர்வோதயம் என்ற சொல் மிகவும் பொருள் செறிந்த தொன்ருகும். நாம் அதைக் குறித்து எவ்வளவு அதிகமாக சிந்திக்கவும், அதை எவ்வளவு அதிகமாக அனுஷ்டிக்கவும் செய்கிரேமோ அவ்வளவுக்கு அதன் பொருளும் விரிந்து விளங்கும். இதன் பொருள் அனைத்தும் இப்பொழுதே, நினைத்த மாத்திரத்தில், புலனாகி விடாது; சிறிது சிறிதாகவே விளங்கி வரும். ஆனல் அதன் ஒரு பொருள் மட்டும் தெளிவாயுள்ளது; அதாவது, மனித ஜாதியை ஆண்டவன் உலகில் சிருஷ்டித்த பொழுது மனிதர்கள் பரஸ்பரம் விரோதம் பூண்டு வாழ வேண்டுமென்ருே, ஒருவனுக்கு நலமாயிருப்பது மற்ெருருவனுக்குத் தீமையாயிருக்க வேண்டுமென்ருே விரும்பியே இருக்க மாட்டார் என்பது. பல பிள்ளைகளைப் பெற்ற தந்தை அவர்களுள் ஒருவனே வாழ வேண்டு மென்று கருத மாட்டான். பிள்ளைகளுள் பலவகை அபிப்பிராயங்கள் இருக்கலாம்; ஆனல் ஒரே விஷயம் ஒருவனுக்கு நன்மையாகவும் மற்ெருருவனுக்குத் தீமை செய்வதாகவும் இருக்கமுடியாது. பலவகைக் கருத்துக்கள் ஒன்று சேர்ந்து பூரணத்துவம் அடைகின்றன. ஏனெனில் ஒரே மனிதனுக்கு பூரணக் கருத்தும் தோன்றுவது சாத்தியமில்லை. ஒருவனுக்கு கருத்தின் ஒரு அம்சமும், மற்ெருருவனுக்கு மற்ெருரு அம்சமும், மூன்ருமவனுக்கு மூன்ருவது அம்சமும் எனத் தோன்றிக்கொண்டேயிருக்கும், இத்தகைய பல அம்சங்களையும் ஒன்று சேர்ப்பதனல் பூரணமான கருத்து உருப் பெறுகிறது. ஆகையால், பல வகைக் கருத்துக்களும் தோன்றுவது அவசியமே. அதில் நன்மையுண்டே தவிர தீமை யொன்றுமில்லை. ஆனல் இது காரணமாக ஒருவருக்கும் மற்றவருக்கும் அவருடைய நன்மையின் விஷயத்தில் விரோதம் தோன்றத் தேவையில்லை.

ஸர்வோதய விளக்கம்

நாம் ஒருவருக்கு நன்மை யெதுவோ, அதுவே மற்றவருக்குத் தீமையாகும்படி நம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கிரேம். செல்வம் முதலிய எந்தப் பொருள்களினல் நமக்கு நன்மை யுண்டாகு மென்று நாம் கருதுகிரேமோ அவைகளை மற்றவர்களைச் சிறிதும் பொருட்படுத்தாமலும், சில சமயங்களில் பிறர் கையில் உள்ளதைப் பிடுங்கியும் சேர்த்துக் கொள்ளுகிரேம். அன்பைக் காட்டிலும் பொருள் அல்லது பொன்னின் போதை எங்கும் பரவியிருக்கிறது. இதன் பயனுக, பரஸ்பர இணக்கமும் ஒற்றுமையும் சுலபமாக அமைய வேண்டியது போக, சிரம சாத்தியமாகிவிட்டது. இந்த இணக்கம் அல்லது ஒற்றுமையை ஆராய்ந்ததன் விளைவாகப் பல அரசியல் நூல்களும், சமுதாய சாஸ்திரங்களும், பொருளாதார நூல்களும் தோன்றியிருக்கின்றன. ஆயினும் எல்லோருக்கும் நன்மை யென்னவோ ஏற்படக் காணும். அது ஏற்படுவதற்கு எளிய விஷயமொன்றை நாம் புரிந்து கொள்ளவேண்டும். அதாவது, ஒவ்வொருவரும் பிறரின் நன்மையைப் பற்றி அக்கறை கொள்வதோடு மற்றவர்களுக்குத் தொந்தரவு விளைவிக்கும் வகையில் தம் நன்மைக்கானவற்றையும் செய்யக் கூடாது. குடும்பத்தில் நடப்பது இதுவே. குடும்பத்தில் சுலபமாக நடைபெறும் ஒன்றை சமுதாயத்தில் நடத்துவது சிரம சாத்தியமாய் இருப்பதற்கில்லை; ஏன், சுலபமாகவே தான் இருக்க வேண்டும். இதற்குத் தான் ஸர்வோதயம் என்பது.

இரு விதிகள்

ஸர்வோதய மென்பதற்கு இது மிகவும் சுளுவானதும் தெளிவானதுமான பொருள். நாம் இதை அனுஷ்டிக்க அனுஷ்டிக்க இதன் மற்ற பொருள்களும் நமக்குப் புலனாகிக் கொண்டே வரும். ஆனல் மேற்கூறியது அதன் மிகவும் சுருக்கமானதும் தெளிவானதுமான பொருளாகும். அதிலிருந்தே நாம் சொந்தப் பாடுபட்டு சம்பாதிப்பதையே உண்ண வேண்டுமே தவிர பிறர் உழைத்துப் போடுவதைக் கொண்டு நம் வயிற்றை நிரப்பக் கூடாதென்ற விதி பிறந்திருக்கிறது. அதாவது, நாம் பிறருக்குப் பாரமாக வாழக் கூடாது. பிறருடைய பொருளை ஏதேனும்

ஒரு உபாயத்தினுல் நாம் வசப்படுத்திக் கொள்வோமானல் அதை நமக்குச் சொந்தமென்று சொல்லக்கூடாது. சம்பாத்தியம் என்பதற்கு சொந்த உழைப்பின் விளைவு என்பதே பொருள். இந்த இரு விதிகளை நாம் ஏற்றுக் கொள்வோமானல் ஸர்வோதய சமாஜக் கருத்துக்கள் உலகில் பரவிவிடும்.

நன்னுள் விரைவில் வருவதாக!

உலகத்தில் இந்த பிரசாரம் எப்பொழுதோ நடப்பதாயிருந்தாலும், இந்த சமாஜம் இன்று இங்கிருந்து தொடங்குகிறது என்ருல், இந்த மத்திய இந்தியாவில் அதன் ஆரம்பம் சரியாக அமைந்து அது இந்தியாவெங்கும் பரவிவிடும். இது ஒரு புண்ணிய ஸ்தலம். நர்மதை நதி பாய்வதால் இது புனிதமாயிருப்பது. இந்தியாவில் நர்மதையைப் புண்ணிய நதி யென்று சொல்கிருர்கள். "கவெள நர்மதார்த்தம்." கலியுகத்தில் நர்மதைக்குப் பெருமையேன்? ஏனெனில் அது வட இந்தியாவும் தென்னிந்தியாவும் கூடுமிடத்தில் ஓடுகிறது. இத்தகைய மத்திய இந்தியாவில் நீங்கள் கூடியிருக்கிறீர்கள். ஆகையால் ஸர்வோதய மேளாவின் காரணமாக நீங்கள் இந்தக் கருத்தை கிராமந்தோறும் வீடு வீடாகச் சென்று பரப்புவீர்களென்று எதிர்பார்க்கிறேன். ஒரு சிறு பிள்ளையும் ஸர்வோதய சமாஜத்தின் ஊழியனுகலாம். அதற்கவன் பிறருக்கு ஊழியம் செய்வதோடு, தானே ஏதேனும் பொருள் உற்பத்தி செய்துவந்தால் போதும். இவ்வாறு லட்சோப லட்சம், கோடானுகோடி ஊழியர்கள் இந்த ஸமாஜத்தில் சேரக்கூடும். இப்பொழுது ஊழியர்களின் பெயர்களை புத்தகத்தில் பதிவு செய்து வருகிருர்கள். ஆனல் எல்லோருடைய பெயர்களையும் பதிவு செய்வதற்குப் புத்தகத்திற்கு எங்கே போவது என்று எண்ண வேண்டிய காலமும் வரலாம். ஏனெனில் உலகமே அப்பொழுது தன் பெயரைப் பதிவு செய்து கொள்ள விரும்பும்.

அந்த நன்னுளை விரைவில் கொணரும்படி நான் ஆண்டவனை வேண்டுகிறேன்.

வினேபா

★ ★ நூல் காணிக்கை மூலம் வாக்காளர் ★ ★

வரும் பிப்ரவரி மாதம் 12-ந் தேதி ஸர்வோதய மேளா நடைபெறும் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொருவரும் ஒரு சிட்டம் நூல் காணிக்கையாகச் செலுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். ஒரு சிட்டம் நூல் கொடுப்பவர் யாராயிருந்தாலும், ஸர்வோதயத் தத்துவத்திற்கு அவர் வோட்டளித்தவர் என்று கருதப்படுவார். இவ்விதத்தில் அவரது பெயரும் விலாசமும் நமது காரியாலயத்தில் பதிவு செய்து கொள்வோம். இதன் மூலம் உங்களுக்கு திட்டவட்டமான, ஒரு முறையான வேலைத்திட்டத்தை நான் அளித்திருக்கிறேன். இப்பொழுதுள்ள வாக்காளர்கள் 18 கோடிப் பேர்தான்; என்ருலும், நம்முறைப்படி ஐந்து வயதுக் குழந்தையுங்கூட வோட்டராகும். கதருடுத்துபவர்தான் நூல் காணிக்கை கொடுக்கவேண்டுமென்பது அவசியமில்லை. நம் வோட்டர் ஒரு குடிகாரரே யானுலும், அவர் குடியை விட்டொழிக்குமாறு செய்வது என் கடமை. ஒரே குடும்பத்தவரான பலர் வெவ்வேறு ஊர்களில் இருந்தபோதிலும் விசேஷ சந்தர்ப்பங்களில் ஒன்று கூடுவது போல, நூல் காணிக்கை செலுத்தும் ஒரே குடும்பத்தவர்களான நாம் எல்லோரும் ஸர்வோதய மேளாவில் கலந்துகொள்ள வேண்டும். இடையில் நம் ஊழியர்கள் கிராமங்களைச் சுற்றிப்பார்த்து, நூல் காணிக்கை செலுத்துவோரைச் சந்தித்துவிட்டு மேளாவில் வந்து சேருவார்கள். ஒரு கிராமத்தில் விபீஷணரைப் போன்று ஒரே ஒரு நன்கொடையாளர் இருந்தபோதிலும், அங்கும் நாம் செல்லவேண்டியது அவசியம்.

நாடு முழுதிலும் மகத்தான சக்தியைத் தோற்றுவிக்கவல்ல சர்வவியாபகமான இந்தத் திட்டத்தை நான் உங்களுக்கு சமர்ப்பித்திருக்கிறேன்.

மதுரா
2-11-'51

வினேபா

★ ★ ★

★ பாப்பாவின் காந்தி ★

காந்திஜிக்கு குழந்தைகள் என்றால் மிக்க பிரியம். குழந்தைகளிடத்தில் எப்பொழுதும் சிரித்து விளையாடுவார். வாலிபர்களிடத்தில் மிக்க அன்பு காட்டுவார். அவருடைய பத்திரிகையின் பெயரும் "யௌவன இந்தியா" (Young India) என்றே வைத்தார். ஆகையால் குழந்தைகளும் வாலிபர்களும் மகாத்மாவிடத்தில் விசேஷ பக்தி காட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். மகாத்மாவின் வாழ்க்கையைப் பற்றி, எளிய நடையில், உங்களுக்காகவே பாப்பாவின் காந்தி என்று ஒரு புத்தகம் ஒரு காந்தி பக்தர் குஜராத்தியில் எழுதினார். காந்திஜி பிறந்த குஜராத்தில் இதைப் படிக்காத குழந்தையும் வாலிபரும் இல்லை. இதை, தமிழ்நாட்டுக் குழந்தைகளும் வாலிபர்களும் படிக்கவேண்டுமென்று, தமிழில் மொழி பெயர்த்து அழகான உருவில் வெளியிட்டிருக்கிறோம். பள்ளிக்கூடம் போகும் ஒவ்வொரு பையனும் பெண்ணும் இந்தப் புத்தகத்தை எடுத்தால் முடிக்காமல் கீழே வைக்க மாட்டார்கள்.

காந்திஜியை ஒருமுறை காப்பியடிக்கும்படி ஆசிரியரே சமிக்ஞை செய்தார். சத்தியமே உருவாகிய காந்திஜி எப்படி அந்தத் தவறைச் செய்வார்? இந்த சந்தர்ப்பத்தில் அவர் நடந்து கொண்ட விதத்தைக் கீழே படியுங்கள்.

பரீக்ஷை

காந்திஜி ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் இரண்டாவது வகுப்பிலோ, மூன்றாவது வகுப்பிலோ படித்துக்கொண்டிருந்தார். ஒரு சமயம் பரீக்ஷை நடத்துவதற்காக அவருடைய பள்ளிக்கூடத்திற்கு இன்ஸ்பெக்டர் வந்தார். அவர் காந்திஜியின் வகுப்பில் எல்லாப் பிள்ளைகளையும் ஐந்து ஆங்கிலச் சொற்கள் எழுதச் சொன்னார். வகுப்பின் ஆசிரியர் அருகில் இருந்தார். அவர் கோணல் பார்வையில் எவன் எப்படி எழுதுகிறான் என்று பார்த்துக்கொண்டே இருந்தார். அவருடைய நெஞ்சு படபடத்துக்கொண்டிருந்தது. பிள்ளைகள் பிழையாக எழுதி விட்டால் உபாத்தியாயருக்குச் சொல்லித் தரத் தெரியவில்லை என்று இன்ஸ்பெக்டர் தன்னைக் கடிவாரோ என அஞ்சினார்.

உபாத்தியாயர், மோகனதாஸ் 'Kettle' என்ற சொல்லை சரியாக எழுதவில்லை என்பதைக் கவனித்தார். ஆனால் பாவம், அவர் என்ன செய்யமுடியும்? வட்டமிட்டுக் கொண்டே இருந்தவர் மோகனதாஸிடம் வந்து தம் பூட்ஸினால் மோகனதாஸின் காலில் தட்டி, "பக்கத்துப் பையனுடைய சிலேட்டைப் பார்த்து எழுது" என்று ஜாடை செய்தார். ஆனால் இம்மாதிரியான விவகாரங்களுக்கும் மோகனதாஸுக்குந்தான் வெகுதூரமாயிற்றே. உபாத்தியாயர் தம்மை திருட்டுத்தனமாகப் பார்த்து எழுதச் சொல்கிறார் என்பதே அவர் மனத்தில் புகவில்லை. பக்கத்தவனைப் பார்த்து சரியாக எழுதும்படி உபாத்தியாயர் சொன்னது அவருக்கு எப்படிப் புரியும்? மறுநாள் உபாத்தியாயர் மோகனதாஸிடம், "நீ சுத்த முட்டாளா? எவ்வளவு ஜாடையெல்லாம் செய்தேன். உன் களிமண் மூளையில் நுழைந்தால்தானே!" என்றார்.

காந்திஜி உபாத்தியாயரிடம் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவர் தம் மனதிற்குள் உபாத்தியாயருடைய வார்த்தை ஒப்புக் கொள்ளத் தக்கதல்ல, அவர் கூறியது தவறு, அதைச் செய்தால் பாவம் என்று உணர்ந்து கொண்டாரென்பது நிச்சயம். ★ ★

இந்தப் புத்தகம் பன்னிரண்டணாதான். உங்கள் வீட்டுப் பெரியோரை வாங்கித் தரச் சொல்லுங்கள்.

இதற்கும் இம்மாதிரியான பல புத்தகங்களுக்கும் இந்த எழுதவும்:-
A. I. S. A. ஸர்வோதய பிரசுராலயம்; வீரபாண்டி: திருப்பூர்.

நூற்புடன் நெசவையும் இணைக்க

கிருஷ்ணதாஸ் காந்தி

நூற்புடன் நெசவையும் இணைத்துவிட்டால் நூற்ற நூலை வீசனத்தில் சுற்றிச் சிட்டம் போடவும், பின்னர் நெய்வதற்காக அதைக் கறக்கவும் வேண்டிய அவசியம் இருக்காது. ஒரு சதுர கெஜம் துணி தயாரிப்பதில் இந்த விதமாக ஒரு மணி முதல் ஒன்றே கால் மணி நேரம் வரை மீதமாகும். இதனால் நெய்பவரின் வருமானம் அதிகரிக்கும். ஆடை சுய தேவைப் பூர்த்தியாளர்களுக்கு நேரம் மீதமாகக் கூடும். சேவாகிராமத்திலுள்ள காதி வித்தியாலயத்தில் இது பற்றி ஆராய்ச்சி செய்யப்படுகிறது. அதில் இன்றுவரை கிடைத்த அனுபவத்தைப் பற்றிய சில புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்படுகின்றன.

ஐந்து, ஆறு தொண்டர்களைக் கொண்ட ஒரு கோஷ்டி பஞ்சிலிருந்து நெசவு வரையிலுள்ள எல்லா வேலைகளையும் செய்து 8 கால் 45″ அகலத்தில் எட்டு கெஜ நீளமுள்ள இரண்டு பீஸுகளும், $14\frac{1}{2}$ கெஜ நீளத்தில் இரண்டு பீஸுகளும் தயாரித்தார்கள். எல்லா பீஸுகளிலும் ஒரு மணி நேர வேலைக்கு $1\frac{1}{2}$ அணாவுக்கும் அதிகமான கூலி அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. தினசரி வேலை நேரம் ஏழு மணியாக இருக்கிறது. இதில் சாதனம் தயாரித்தல், காரியாலயத்திலிருந்து பஞ்சு வாங்கி வருதல், நெய்த துணியைக் கொண்டு போய்க் கொடுத்தல், இதர வேலைகளின் நேரத்தைக் கழித்து நேரிடையான வேலைகளில் வேகம் பார்த்த நேரத்தைத்தான் கணக்கிட்டு இந்தக் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கிறது. குறைந்தபட்ச நேரத்தில் தயாரான பீஸின் விவரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. 8 கால் 45″ அகலமும், சலவைக்குப் பிறகு $14\frac{1}{2}$ கெஜ நீளமும் இருந்தது. அதற்கு உபயோகப்படுத்தப்பட்ட நூலின் நெம்பர் 16. பஞ்சிலிருந்து துணி நெய்வது வரையிலுள்ள ஒவ்வொரு வேலைக்கும் செலவான நேரம்:—

வேலை விவரம்	செலவான நேரம்	ஒரு மணிக்கு வேகம்
பஞ்சு கொட்டுதல்	ம. நி.	
[5ராத்தல் $2\frac{1}{4}$ தோலா]	15. 53	$12\frac{1}{4}$ தோலா
நூற்றல்		
71 சிட்டங்கள்	118. 5	372 தார், வீசனத்தில் சுற்றுமல்.
பாவு ஓடுதல்	10. 17	
ஊடைத்தார் சுற்றுதல்	4. 4	
இணைத்தல் (நிரடுதல்)	2. 29	
பாவு ஆற்றுதல்	6. 10	
நெய்தல்	12. 45	
	169. 43	

அதாவது, ஒரு சதுர கெஜம் துணி தயாரிப்பதற்கு சராசரி ஒன்பது மணி இருபத்திரண்டு நிமிஷம் செலவாகி யிருக்கிறது. சர்க்கா சங்கத்தினுடைய இன்றைய கூலியின் பிரகாரம் பஞ்சுடைக்கும் கூலி ரூ.1-9-0, நூற்புக் கூலி ரூ. 10-11-0, நெசவுக் கூலி ரூ. 7-4-0, ஆக மொத்தம் ரூ. 19-8-0 கூலியாகிறது. இதில் நெசவில் ஏற்பட்ட குறைகளுக்காக விதிப்படி பதினைந்து அணா குறைக்கப்பட்டிருக்கிறது. 169 மணி 43 நிமிஷ வேலைக்கு ரூ. 18-9-0 நிகரக் கூலியாகக் கிடைத்தது. ஒரு மணி நேர வேலைக்கு ரூ. 0-1-9 கூலி கிடைத்தது. மற்ற பீஸுகளிலும் ஏறக்குறைய இதே அளவு கூலி கிடைத்தது.

பிறகு ஒரு மெல்லிய ரகப் பீஸ் தயாரிக்கும் ஆராய்ச்சி செய்யப்பட்டது. அதற்கு உபயோகித்த நூலின் சராசரி நெம்பர் 27. $11\frac{1}{2}$ கால் 45″ அகலத்தில் பீஸ் தயாரிக்கப்பட்டது. சலவைக்குப் பிறகு அதன் நீளம் பத்து கெஜம் இருந்தது. இதில் ஒவ்வொரு வேலைக்கும் செலவான நேரம், வேகம் முதலிய விவரம் கீழ்க்கண்டவாறு:

வேலை விவரம்	செலவான நேரம் ம. நி.	ஒரு மணிக்கு வேகம்
பஞ்சு கொட்டுதல்	9. 26	$11\frac{1}{4}$ தோலா
நூற்றல்	148. 7	302 தார் (வீசனத்தில் சுற்றுமல்)
பாவு ஓடுதல்	6. 3	
இணைத்தல்	6. 1	$2\frac{1}{4}$ கால்
பாவு சுற்றுதல்	14. 57	....
ஊடைத் தார் சுற்றுதல்	3. 54	$8\frac{3}{4}$ சிட்டம்
நெய்தல்	20. 32	....
மொத்த மணி	209. 0	

இந்த துணியில் ஒரு சதுர கெஜம் தயாரிப்பதற்கு 16 மணி 37 நிமிஷம் செலவாகியிருக்கிறது. சங்கத்தின் கூலியின் பிரகாரம் பஞ்சுடைப்பதற்கு கூலி ரூ 2-5-6. நூற்புக் கூலி ரூ 13-0-0, நெசவுக் கூலி 6-14-6, ஆக மொத்தம் ரூ 22-4-0 கூலியாகிறது. ஒரு மணி நேர வேலைக்கு 0-1-$8\frac{3}{4}$ கூலி கிடைத்திருக்கிறது. இந்தப் பீஸ் தயாராகும் போது எலி நூலைக் கடித்து விட்டதனுலும், அச்சு முற்றிலும் புதிதாக இருந்த காரணத்தினுலும் சுமார் 15 மணி நேரம் அதிகமாகி விட்டது. இம்மாதிரி நேரம் அதிகமாகி யிராவிட்டால் ஒரு மணி நேர வேலைக்கு சுலபமாக ரூ 1-$10\frac{1}{4}$ கிடைத்திருக்கக் கூடும்.

மேலே குறிப்பிட்டுள்ள கூலிக் கணக்கு தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் கூலியின் பிரகாரம் கணக்கிடப் பட்டிருக்கிறது. ஆனல் பஞ்சிலிருந்து துணிவரையிலு முள்ள எல்லா வேலைகளையும் தொழிலாளியே செய்து கொண்டால் உற்பத்திக்காக ஏற்படும் நிர்வாகச் செலவில் சிறிது மீதமாகக் கூடும். அந்த லாபமும் தொழிலாளிக்குக் கொடுக்கப்படுமானல், மெல்லிய ரகப் பீஸ் நெசவு செய்வதில் ஒரு மணி நேர வேலைக்கு சுலபமாக இரண்டணுக் கூலி அவர்களுக்குக் கிடைக்கக் கூடும். அத்துடன், டில்லித் தீர்மானத்தைக் காட்டிலும் நூற்பின் வேகம் அதிகரித்திருப்பதும் தெரிய வரும்.

தயாரிக்கப் பட்ட பீஸ்களில் பாவு ஓடுவதற்கு கீழ்க் கண்ட முறைகள் கையாளப் பட்டன: (1) நூற்ற கதிரிலிருந்தே நேராகப் பாவு ஓடுதல் (2) கதிரிலிருந்து திரிவட்டத்தில் நூலைக் கறந்து அதிலிருந்து பாவு ஓடுதல் ஆகிய இரண்டு முறைகளும் பரீட்சிக்கப்பட்டன. இரண்டாவது முறையில் பாவு ஓடுவதற்கு முன்பாக திரிவட்டத்திலுள்ள நூலை நனைக்கக் கூடிய வசதி இருந்தது. கதிரிலிருந்து நூலை நனைக்காமலே தான் பாவு ஓடவேண்டியிருந்தது. பின்னல் பாவை நனைக்க வேண்டிருந்தது. ஆனல் கதிரிலிருந்து நேராகப் பாவு ஓடுவதில் வேகம் சுமார் 8% அதிகமாக இருந்தது. கதிரிலிருந்து நூலை பிரிவட்டத்தில் கறந்து பாவு ஓடுவதில் மணிக்கு $14\frac{1}{2}$ கெஜ நீளத்தில் 180 இழைகள் ($\frac{3}{4}$ கால்) ஓடக் கூடிய வேகம் இருந்தது. கதிரிலிருந்து நேராகப் பாவு ஓடுவதில் மணிக்கு $14\frac{1}{2}$ கெஜ நீளத்தில் 195 இழைகள் ($\frac{13}{16}$ கால்) ஓடக் கூடிய வேகம் இருந்தது. நூற்புடன் நெசவையும் இணைத்து விட்டால் போதுமான லாபம் இருக்கிறது என்பது இப்பொழுது நிரூபணமாகி விட்டது. ஆனல் கருவிகள், மிகச் சுலபமான முறை, வெவ்வேறு ரகத் துணி முதலியவைகளில் இதன் பயனைப் பரீட்சிக்க இந்த ஆராய்ச்சியை நீண்டகாலம் வரை நடத்த வேண்டியிருக்கும்.

(இது சம்பந்தமான முன் கட்டுரையை டிசம்பர் '51 இதழில் பார்க்கவும்)

★ ★ ★

சர்வ சேவா சங்கத்தின் தீர்மானங்கள்

சர்வ சேவா சங்கம், 1951-ம் வருஷம் நவம்பர் 23-உ கூடி, பூதான யக்ஞத்தைப் பற்றியும் பயிற்சி சம்பந்தமாகவும் கீழ்க் கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது:

"பூதான யக்ஞம் ஸ்ரீ விநோபாஜியால் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது. இந்தியாவில் அஹிம்சா சமுதாயத்தை அமைப்பதற்கு அது முக்கியமான வரவேற்கத்தக்க ஒரு நடவடிக்கை யென்று சர்வ சேவா சங்கம் நம்புகிறபடியால், பூதான யக்ஞத்தை அது முழு மனதுடன் ஆதரிக்கிறது."

"எல்லாப் பக்கங்களிலிருந்தும் இவ் வியக்கத்திற்குக் கிடைத்துவரும் உற்சாகமான ஆதரவை சர்வ சேவா சங்கம் வரவேற்கிறது. மேலும், விநோபாஜியின் இந்த இதயத்தைக் கவரும் வேண்டுகோளுக்கு ஆதரவளித்து,

(தொடர்ச்சி அட்டை 3-ம் பக்கத்தில்)

★ பணம் செலவிட மூன்று வழிகள் ★

ஆச்சாரிய விநோபா பாவே

நான் வரங்கும் தானத்தினல் ஏழைகளுக்கு மட்டும் பாதுகாப்பு இல்லை, பணக்காரர்களுக்கும் பாதுகாப்பு இருக்கிறது. பணத்திற்கு மூன்று வழிகள் இருக்கின்றன: ஒன்று நீங்கள் சாப்பிடுங்கள், அனுபவியுங்கள், அல்லது தானம் கொடுங்கள்; இல்லாவிட்டால் பொருள் அழிந்துவிடும். ஒருவரிடத்தில் 500 ஏக்கர் நிலம் இருக்கிறது, ஒருவரிடத்தில் 1000 ஏக்கர் இருக்கிறது, இன்னொருவரிடத்தில் 2000 ஏக்கர் நிலமிருக்கிறது. இம்மாதிரி நிலத்தை உடையவர்கள், அனுபவிக்க வேண்டுமென்று விரும்பினலோ அல்லது சாப்பிட விரும்பினலோ, ஐயாயிரம், இரண்டாயிரம் ஏக்கர் நிலத்தில் வரக்கூடிய வருமானத்தைச் சாப்பிட்டு விடுவார்களா? இவ்வளவையும் அவர்கள் சாப்பிட முடியாது. அவர்களின் வயிறு எவ்வளவு பெரிதாக இருந்தாலும், நாலாயிரம் ஏக்கர் நிலத்தில் வரக்கூடிய விளைச்சலைச் சாப்பிட முடியாது. பத்துப் பன்னிரண்டு நபர்களாக இருந்தாலும், எல்லோரும் சேர்ந்துங்கூட நாலாயிரம் ஏக்கர் நிலத்தில் வரக்கூடிய விளைச்சலைச் சாப்பிட்டு ஜீரணிக்க முடியாது. எவ்வளவு சாப்பிட முடியுமோ அவ்வளவு அவசியம் சாப்பிடுங்கள், ஆனல் பெட்டி நிறைய வைப்பதற்குப் பேராசை கொள்ளாதீர்கள். ஏனென்ருல் மீதியாகச் சேமித்து வைப்பதில் எனக்கோ, கம்யூனிஸ்டுக்காரர்களுக்கோ, அல்லது கொள்ளையடிப்பவர்களுக்கோதான் உரிமையிருக்கும் என்று கூறுகிறேன்.

"உங்களிடத்தில் பணத்திற்கு மூன்று வழிகள் உண்டு: நீங்கள் எவ்வளவு சாப்பிட முடியுமோ அவ்வளவு சாப்பிடுங்கள்; எனக்கு எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுங்கள்; இதில் ஏதாவது நீங்கள் மீதப்படுத்தி வைத்தால் கொள்ளைக்காரர்கள் எடுத்துச் செல்வார்கள். இதைத் தவிர பணத்திற்கு நான்காவது மார்க்கம் கிடையாது" என்று பர்த்ருஹரி சொல்லியதைத் தெரிந்துகொள்வீர்களாக.

"யாராவது கேட்க வந்தால், கொஞ்சமும் யோசியாது கொடுத்துவிடு" என்று என் தாயார் எனது குழந்தைப் பருவத்தில் சொல்வது வழக்கம். "கொடுப்பவர் தேவராகிருர்கள், வைத்துக்கொள்ளுபவர் ராட்சதர்களாகின்றனர்" என்றும் எனது தாயார் சொல்வது வழக்கம். கொடுப்பவர்கள் தேவர், வைத்துக்கொள்வோர்

(125-ம் பக்கம் பார்க்க)

நூல் காணிக்கை செலுத்த வேண்டுகோள்

ஸர்வோதய மேளாவில் வசூலிக்கப்படும் நூல் சிட்டங்கள் அகில பாரத சர்வ சேவா சங்கத்தின் நிதியில் உடலுழைப்பின் தத்துவப்படி நடக்கும் வேலைத் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் என்று சங்கம் சென்ற ஏப்ரல் மாதம் தீர்மானித்துள்ளது.

நூல் காணிக்கைகளை தமிழ்நாட்டில் மேற்படி சங்கத்தின் சார்பில் சர்க்கா சங்கக் கிளைகள் மூலம் வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காணிக்கை செலுத்த விரும்புவோர் தங்கள் முழு விலாசம், ஊர், ஜில்லா முதலிய விவரங்களுடன் ஒரு சிட்ட நூலை சர்க்கா சங்கத்தின் கிளைகளில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளவேண்டுமாய்க் கோரப் படுகிறது. நன்கொடையாளர்களின் ஜாபிதா மேளா நடக்கும் ஸ்தலங்களில் சமர்ப்பிக்கப்படும். சிட்டங்கள் சர்வ சேவா சங்கத்திற்கு அனுப்பப்படும். காணிக்கை செலுத்தியவர்கள் அனைவரும் சர்வ சேவா சங்கத்தின் ரிஜிஸ்டரில் பதிவு செய்யப்படுவார்கள்.

தமிழ்நாட்டில் குறைந்தபட்சம் 50,000 சிட்டமாகிலும் காணிக்கை எதிர்பார்க்கப் படுகிறது. கதாயி மண்டல் அங்கத்தினர்கள் தங்கள் மண்டல் சுற்றுவட்டகையில் காணிக்கைகளைச் சேகரித்து இணைக்கப்பட்டுள்ள கிளைகளில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளும்படி கோரப்படுகிருர்கள்.

அகில பாரத சர்க்கா சங்கம்

ஸர்வோதய யாத்திரை
திருப்பூர் விபாக்

ஜனவரி 30-ந்தேதி முதல் பிப்ரவரி 12-ந் தேதி வரை காந்திய லட்சியங்களைப் பிரசாரம் செய்வதற்காகவும், நிர்மாணத் திட்டங்களை கிராமங்களில் பரவச் செய்யவும் தேசத்தின் பல்வேறு பாகங்களில் நிர்மாணத் திட்ட ஊழியர்கள் கூட்டங் கூட்டமாக கிராமங் களுக்குச் சென்று, பிப்ரவரி 12-ந் தேதி ஆங்காங்கு மேளா கொண்டாடுவது வழக்க மாயுள்ளது.

இவ்வருடம் இம்மாதிரி யாத்திரை நமது மாகாணத்திலும் ஆங்காங்கு நடைபெறும். சமீபத்தில் சேவாகிராம ஷிபிரில் பிரசாரத் திற்கான ஒரு திட்டம் வகுக்கப்பட்டதை அநுசரித்து, திருப்பூர் விபாகில் கீழ்க் கண்ட படி சுற்றுப்பிரயாணம் நடைபெறும்:

31–1–'52-ல் ஏழு கோஷ்டிகள் வெவ் வேறு உற்பத்தி ஸ்தலங்களிலிருந்து ஸர்வோதய யாத்திரையை ஆரம்பித்து, பல கிராமங்களின் வழியாகச் சென்று 11–2–'52-ல் பேரூருக்குப் போய்ச் சேரு வார்கள். ஜனவரி 30-ந் தேதி முதல் பிப்ரவரி 12-ந்தேதி வரை இதர விபாகங்களிலிருந்து பல கோஷ்டியினர், வெவ்வேறு கிளைகளிலிருந்து புறப்பட்டு, வெவ்வேறு வழியாக, ஒரே இடத்தில் சேர்ந்து மேளா கொண்டாடுவது பற்றியும் யோசனை செய்யப்பட்டு வருகிறது.

யாத்திரையில் தினசரி வேலைத் திட்டம் கீழ்க்கண்ட விதமாக இருக்கும்:

1 மாலை 5 மணிக்கு, நிச்சயிக்கப்பட்ட கிராமத் திற்குப் போய்ச் சேருதல்;

2 மாலை 5 முதல் 6 மணி வரை கிராமத்தைச் சுற்றிப் பார்த்து நூற்போர், நெய்பவர்களின் ராட்டைகளைப் பரிசீலனை செய்தல்; பிரார்த் தனை நூற்பு யக்ஞத்திற்கு ஏற்பாடு;

3 மாலை 6 முதல் 7 மணி வரை நூற்பு யக்ஞம், நூல் காணிக்கை வசூல்;

4 இரவு 7 முதல் 7-30 மணி வரை பிரார்த்தனை;

5 ,, 7-30 முதல் 8-30 மணி வரை சொற் பொழிவு, பிரசாரம்;

6 இரவு 9 மணிக்கு உணவு;

(கோஷ்டியிலுள்ள ஒவ்வொருவருக்கும் கிராமத் தில் ஒவ்வொரு வீட்டில் உணவுக்கு ஏற்பாடு செய்தல் நலம்.)

7 பின்னர், இம்மாதிரி உணவுக்கும் தங்குவதற்கும் ஏற்பாடு செய்திருக்கும் நண்பர்களுடன் சிறிது நேரம் சம்பாஷணை, ஸர்வோதயத் தத்து வத்தைப் பற்றிய விளக்கங்கள், சர்ச்சைகள்;

8 காலை 5 மணிக்கு, துயிலெழுதல், காலைக் கடன்கள்; 6 மணிக்குப் பிரார்த்தனை;

9 காலை 7 மணி முதல் 10 மணி வரை உட லுழைப்பு: இதில் கக்கூஸ் அமைத்தல், கலவை உரக் குழிகள் வெட்டுதல், துப்புரவு செய்தல், மூத்திரக் குழிகள் வெட்டுதல், பொது ஜன ரோடு அல்லது பொது இடத்தைச் செப்ப னிடுதல் முதலியன;

10 காலை 10 மணிக்கு ஸ்நானம்;
,, 11 ,, பகல் போ உணவு;

11 மாலை 12 முதல் 1 மணிவரை இடைவேளை ஓய்வு;

12 மாலை 1 முதல் 3 மணி வரை ராட்டை செப்ப னிடுதல், கதிர்க் கோட்ட மெடுத்தல் முதலிய தொழில் நுணுக்க வேலைகள்;

13 மாலை 3 மணிக்கு அடுத்த கிராமத்திற்குப் புறப் படுதல்.

சஞ்சாலக்

★ ★ ★

பணம் செலவிட மூன்று வழிகள்

(124-ம் பக்கத் தொடர்ச்சி)

ராட்சதர்கள். இதே விஷயத்தைத்தான் நமக்கு ஞானிகளும் தெரிவித்தார்கள். "கொடுத்துக்கொண்டே போங்கள், கிடைத்துக் கொண்டே யிருக்கும்" என்று கூறினார்கள். மேகம் தன்னிடமுள்ள தண்ணீரை மழையாகப் பெய்கிறது; சமுத் திரத்திலிருந்து மறுபடியும் அதற்குத் தண்ணீர் கிடைத்து விடுகிறது. சமுத்திரம் மேகத் திற்குத் தண்ணீர் கொடுக்கிறது, மேகம் சமுத்திரத்திற்குக் கொடுக்கிறது, இம்மாதிரி ஒன்று மற்றொன்றுக்குக் கொடுத்துக் கொண்டிருப்பதனால் சிருஷ்டி யனைத்தும் நன்றாக நடைபெறுகிறது.

"ஸர்வோதயம்", ஜூலை '51

★ டாக்டர் குமரப்பா ★

டாக்டர் ஜே. சி. குமரப்பாவின் 60 வது பிறந்த தினம் 1952, ஜனவரி 4உ வர்தாவில் கொண்டாடப்பட்டது. அந்த சமயம், ஸ்ரீ G. ராமச்சந்திரன், ஸ்ரீ S. K. ஜார்ஜ், இருவரும் அவரது சேவையின் ஞாபகார்த்தமாக ஒரு அரிய புத்தகம் தயாரித்து வெளியிட்டுள்ளனர். இது காந்திய நிர்மாணப் புரட்சியை விவரிக்கும் ஒரு பொக்கிஷம்; சுமார் 400 பக்கம் கொண்டது, கையால் செய்த காகிதத்தில் அச்சிட்டது; இதன் பெயர்: Economics of Peace; விலை ரூ. 10.

இதில், முதல் பகுதியில் ஸ்ரீ குமரப்பாவின் வாழ்க்கை வரலாறு. பூட்ஸும் நிஜாரும் போட்டுக்கொண்டு இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் வாழ்ந்து வந்தவர், 1929-ல் காந்திஜியின் மோக வலையில் சிக்கி, குஜராத் வித்யாபீட ஆசிரியராகவும், மாத்தர் தாலுகாவில் கிராமப் பொருளாதார நிலைமை ஆராய்ச்சியிலும், 1931ல் "ஹரிஜன்" ஆசிரியராகவும், '36ல் கிராமக் கைத்தொழிற் சங்கத்தின் சிருஷ்டிகர்த்தாவாகவும், இன்று சர்வ சேவா சங்கத்தில் சம்பூரண கிராம சேவைத் தலைவராக, விவசாயிகளின் விடுதலைக்காக, பண்ணை ஆசிரமத்தில், *'தோதி ஜாமா'வுடன் ஆராய்ச்சி நடத்துகிறவராகவும் மாறினர் என்ற சரித்திரம் மிக்க விசித்திரமானது. காந்திய நிர்மாணப் புரட்சி ஸ்தாபனங்களின் எழு தலைவர்களின் கட்டுரைகளை இரண்டாம் பாகத்தில் காணலாம். நிர்மாண வேலை செய்துவரும் வாலிபர்களின் உள்ளத்தை இவர் எப்படிக் கவர்ந்திருக்கிருர் என்பதை சில கட்டுரைகள் விளக்குகின்றன.

காந்திஜியின் சத்தியம் - அஹிம்சையை அடிப்படையாகக்கொண்ட பொருளாதாரத் தத்துவத்திற்கு ஒரு திட்டமாக உருக்கொடுத்த பெருமை குமரப்பாவையே சேர்ந்தது. இதனால்தான் காந்திஜியே இவருக்கு D. V. I., (கிராமக்கைத்தொழில் பண்டிதர்—Doctor of Village Industries) என்ற பட்டத்தைக் கொடுத்தார். காந்தியப் பொருளாதாரத் திட்டத்தை எளிதாக எல்லோரும் புரிந்து கொள்ளும்படி இவர் எழுதியுள்ளதும் பேசியுள்ளதும் ஏராளம். இவைகளில் பல புத்தக ரூபத்தில் வெளிவந்துள்ளன.

இவர் வயது 60 ஆகியும் வாலிபராகவே விளங்குகிருர். சமீபத்தில் சர்வ சேவா சங்கக் கூட்டத்தில் விவசாய ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று யோசிக்கப்பட்டது. ஆனல் இந்த வேலைக்கு ஸ்ரீ குமரப்பாவுக்கு அதிக வயதாகிவிட்டதாக யாரோ ஒருவர் கூறினர். அவ்வளவுதான், உடனே, ஸ்ரீ குமரப்பா தன்னை கிராமகைத்தொழிற் சங்கத்தின் பொறுப்பிலிருந்து விடுவித்தால், வர்தாவிற்குப் பக்கத்தில் ஒரு கிராமத்திலேயே, வர்தாவில் உள்ள எல்லா நிர்மாண ஸ்தாபனங்களுக்குமாக ஒரு விவசாய ஆராய்ச்சிப் பண்ணை நடத்துவதாகச் சவால் விடுத்தார். பின்னர், சியால்டாவில் சென்ற வருஷம் பண்ணை ஆசிரமத்தை ஆரம்பித்தார்.

சமீபத்தில் சைனவுக்கும் ஜப்பானுக்கும் போய்த் திரும்பினர். ஸர்வோதய பொருளாதார தர்மம் ஒன்றுதான் தனி மனிதனின் சுதந்திரம், மனித மதிப்பு, ஆத்மீக லட்சியம் முதலியவற்றைக் காக்க முடியும் என்பதை இன்று உபதேசித்து வருகிருர்.

தேசத்தின் வாலிபர்கள் காந்தியப் புரட்சிக்கு வினேபாஜியின் பூதான யக்ஞத்தையும் குமரப்பாவின் பண்ணை ஆசிரமத்தையுமே நோக்கி யிருக்கின்றனர். தக்க சூழ் நிலையில் அஹிம்சா புரட்சி ஏற்பட்டு தேசத்தில் நிரந்தரமான அமைதி உண்டாக்கி உலக சாந்திக்கே வழிகாட்டுவதற்கு டாக்டர் குமரப்பா பல்லாண்டு நம்மிடையே வாழ ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேம்.

ஸ்ரீ குமரப்பாவுடன் பல ஆண்டுகளாக வேலை செய்து வரும் ஸ்ரீ மீ. விநாயகம் சமீபத்தில் 'குமரப்பா' என்ற புத்தகமொன்றைத் தமிழில் வெளியிட்டுள்ளார். இதில் குமரப்பாவின் வாழ்க்கை அழகாக சித்திரிக்கப்பட்டிருக்கிறது. காந்திய வழியில் புதிய இந்தியாவை நிர்ணயிக்கப் பாடுபடும் ஒவ்வொருவரும் இந்தப் புத்தகத்தைப் படிப்பது அவசியம். இதன் விலை ரூ. 2–8–0. Economics of Peace புத்தகமும், ஸ்ரீ மீ. விநாயகம் எழுதிய 'குமரப்பா' என்ற புத்தகமும் ஸர்வோதயபிரசுராலயத்தில் கிடைக்கும்.

*வேஷ்டியை பைஜாமாவாகத் தைத்த சிக்கன ஆடை

★ ★ ★

★ மில் பகிஷ்கார சங்கற்பம் ★

இதைப் படித்து, தமது வாழ்க்கையில் உறுதியாக கடைப்பிடிக்கத் தீர்மானிப்பவர்கள் இதன் இறுதியில் உள்ள மாதிரி சங்கற்ப பாரத்தில் கையெழுத்திட்டு சர்க்கா சங்கக் கிளையில் கொடுக்கலாம்; அல்லது, இங்கு அனுப்பலாம். கையெழுத்திட்டவர்களின் பெயர் "கதர் மலரி" லும் "கதர் உலக"த்திலும் பிரசுரிக்கப்படும்.

பலாத்காரம், சுரண்டல், வர்க்கபேதம் ஆகிய தீமைகளற்ற ஒரு சமூக அமைப்பே ஸர்வோதய லட்சியம் என்பதை நாங்கள் உணர்கிறோம்.

இன்று இந்தியாவில் 5 லட்சம் கிராமங்களிலும் விவசாயத்தைத் தவிர மற்ற எல்லாக் கைத் தொழில்களும் அழிந்து கொண்டு வருகின்றன. கிராமக் கைத்தொழில்கள் அழிந்து வருவதன் காரணமாக, வேலையின்றி விவசாயத்திலேயே ஈடுபட விரும்புவதனால் விவசாயமும் பொருளாதார ரீதியில் பயனற்றதாக க்ஷீணதசை யடைந்துவருகிறது. நாளுக்கு நாள் பெருகிவரும் ஜனத்தொகையைத் தாங்கும் சக்தியும் பூமிக்குக் குன்றி வருவதனால், தேசமெங்கும் சோர்வும் சந்தோஷமின்மையும் பரவிவருகிறது.

இதற்கு நேர் மாறாக, வாழ்கைக்கு அத்தியாவசியமான எல்லாப் பொருள்களின் உற்பத்தியும் நகரங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில், ஒரு சில நபர்களின் ஆதிக்கத்தில், குவியல் முறையில் வளர்ந்து வருகிறது. இதன் மூலம் லட்சக்கணக்கான கிராமங்களிலிருந்து செல்வம் சுரண்டப்பட்டு, கிராமங்கள் நாளுக்குநாள் ஏழ்மையடைய நகரங்களில் செல்வம் பெருகிவருவதை நாம் உணர்கிறோம். இம்மாதிரி, நகரங்களில் வசிக்கும் ஒரு சில செல்வந்தர்களின் நன்மைக்காக லட்சக்கணக்கான கிராமங்களில் வசிக்கும் கோடிக்கணக்கான மக்களைச் சுரண்டுவதைத் தடுக்க வேண்டும்.

இவ்விதமாக வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களின் மூலம் கிராமங்களிலிருந்து வெளியேறும் செல்வப் பெருக்கிற்கு அடிப்படையானவை மில் துணியும், உணவுப் பொருள்களில் மில் பொருள்களுமே யாகும். சுதேசி இயக்கத்தின் பொழுது கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள விதேசித்துணி நம் நாட்டில் இறக்குமதி யாவதனால்தான் தேசம் க்ஷீணதசை யடைந்து வருகிறதென்று உணர்ந்தே நாம் அயல் நாட்டுப் பொருள்களை பகிஷ்கரித்தோம். இன்றும் நாட்டின் லட்சக் கணக்கான கிராமங்களிலிருந்து மில் துணிக்காகச் செல்வம் வெளியேறிக்கொண்டுதான் இருக்கிறது; ஆனால் முன்பு வெளிநாடுகளுக்குச் சென்றுகொண்டிருந்த செல்வம் இப்பொழுது தூர தூரத்திலிருக்கும் பட்டணங்களுக்குச் செல்கிறது என்பதே வித்தியாசம்.

ஆகையால் கிராமங்களின் பொருளாதாரச் சீர்குலைவுக்கு முக்கிய காரணமான மில்லில் தயாராகும் பொருள்களை கிராம மக்களாகிய நாம் நமது உணவு உடைக்காக முற்றிலும் உபயோகிப்பதில்லை என்று உறுதி கொள்கிறோம்.

எந்த மூலப் பொருள்கள் கிராமங்களில் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றால் தயாரிக்கப்பட்ட பொருள்களுக்கு கிராமங்களிலேயே தேவை இருக்கிறதோ அம்மாதிரிப் பொருள்களை தயாரிக்கும் தொழில்களை கிராமங்களிலேயே வளர்ப்பதற்கும் முயற்சி செய்வோம்.

நமது ஆடைக்காக நாமே நூற்று, நாமோ அல்லது அக்கம் பக்கத்தி லுள்ளவரால் நெசவு செய்து நமது ஆடைகளை நாமே தயாரித்துக் கொள்வோம் என்று உறுதி கொள்கிறோம்.

உணவுப் பொருள்களிலும் மில்லில் குத்திய அரிசி, மில்லில் ஆட்டிய எண்ணெய், மில்லில் அரைத்த மாவு, வெள்ளை ஜீனி அல்லது சர்க்கரை இவைகளை நாம் உபயோகிப்பதில்லை என்றும், அவைகளுக்குப் பதிலாக செக்கில் ஆட்டிய எண்ணை, கையினால் குத்திய அரிசி, திருகு கல்லில் அரைத்தமாவு அல்லது ரவை, கிராமக் கை ஆலையில் தயாரான கரும்புச் சர்க்கரை, பனை வெல்லம் முதலியவற்றையே உபயோகிப்பதென்றும் உறுதி கொள்கிறோம்.

தாவர நெய் அல்லது வனஸ்பதியை நாம் முற்றிலும் உபயோகிப்பதில்லை என்றும் உறுதி கொள்கிறோம்.

இவை தவிர, கிராமங்களிலிருந்து செல்வம் வெளியேறுவதில் பீடி, சிகரெட், புகையிலை, பொடி, சுருட்டு, காப்பி, டீ முதலியவைகளும் பெரும் பங்கு கொண்டுள்ளதை உணர்ந்து, அப்பொருள்களையும் நமது வாழ்க்கையிலிருந்து முற்றிலும் அகற்றி விடுவோம் என்றும் உறுதி கொள்கிறோம்.

★ சங்கற்பம் ★

உணவு, உடை இரு விஷயங்களிலும் மில் பொருள்களை உபயோகிப்பதனால் கிராம மக்களின் சர்வ நாசம் விளைகிறது என்பதை நான் உணர்கிறேன். ஆகையால் கீழே குறிப்பிட்டிருக்கும் பொருள்களில் நான் கிராமங்களில் தயாராவதையே உபயோகிப்பேன் என்று திட சங்கற்பம் செய்துள்ளேன். இம்மாதிரியே, இதர மில் பொருள்களையும் எனது வாழ்க்கையில் பகிஷ்கரிப்பதோடல்லாமல், என்னுடன் தொடர்புள்ள இதர நபர்களையும் இம்மாதிரி செய்யும்படித் தூண்டுவேன்.

நான் இந்த சங்கற்பத்தை வீட்டில் மட்டுமோ அல்லது எல்லா இடங்களிலுமோ அனுஷ்டிப்பதென்று உறுதி கொண்டுள்ளேன்.

கையெழுத்து

பெயர் :

முழு விலாசம் :

எந்தப் பொருளைப்பற்றி சங்கற்பம் செய்துகொள்ளப்படுகிறதோ அததற்கு நேரே × என்று அடையாளமிட்டு அனுப்பிவைக்கக் கோரப்படுகிறது.

பொருளின் பெயர்	சங்கற்பம்: வீட்டில் மட்டிலும்	சங்கற்பம்: வீட்டிலும் வெளியிலும்
1. துணி - கதர்		
(அ) சுயதேவை		
(ஆ) சர்க்கா சங்க அத்தாட்சி பெற்றது		
2. கைக்குத்தல் அரிசி		
3. கையினால் அரைத்த மாவு, ரவை		
4. செக்கில் ஆட்டிய எண்ணெ		
5. கிராமக் கைத்தொழில் மூலம் தயாரித்த கரும்புச் சர்க்கரை, பனை வெல்லம் முதலியன		
6. கிராமத்தில் கையால் செய்த இதர பொருள்கள்....		

★ தமிழ்நாட்டில் தீபாவளி கதர் விற்பனை ★

(1951 அக்டோபர் 1-உ முதல் 29-உ வரை)

விபாகின் பெயர்	[illegible] சில்லறை ரூ.	நூற்பவர்களுக்கு ரூ.	பூரா நூலுக்காக மாற்றியது ரூ.	கதாயி மண்டல்களுக்கு ரூ.	கதருக்காக வந்த சிட்டம்- எண்.	நெய்த சுயதேவைக் கதர், சதுரகெஜம்.
திருப்பூர்	1,10,555	45,533	13,818	2,096	99,987	1,655
சென்னை	22,050	60	794	380	1,716	1,143
தஞ்சை	1,33,566	9,346	2,962	25,050	9,333	2,113
மதுரை	1,46,408	13,518	18,302	8,172	73,636	2,528
திருநெல்வேலி	42,564	11,796	20,532	108	72,194	1,966
ஆக மொத்தம்	4,55,143	80,253	56,408	35,806	2,56,866	9,405

★ தீபாவளியில் எல்லா விபாகங்களிலும் கதர் விற்பனை ரூ. 6,27,610 ★

Edited and Published by N. Ramaswami
for Sarvodaya Prachuralayam, All India Spinners' Association, Veerapandy, Tirupur.
Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் செய்தி

ஸர்வோதய சங்கம் வாழ்க!

ஸ்ரீ விநோபா பாவே மஹாத்மாஜியின் உள்ளத்துடிப்பாக விளங்குகிறார். அவர் தொடங்கிய ஸர்வோதய சமாஜம் உலகிற்கே அரிய புதிய ஜீவோதய சமாஜமாகும். தமிழ் நாட்டில் இந்தச் *சங்கத்தின் கொள்கைகளும் செயல் முறைகளும் பரவுக. பூமிதானக் கொள்கை சிறந்தது. உழைக்கும் உழவர் பலர் நிலமில்லாது வாடுகின்றனர். நெய்யும் கைகளுக்கு நூலில்லை. உழும் ஏர்களுக்கு மண்ணில்லை. இந்தக் குறைகளை நீக்கத் தமிழர் பாடுபடவேண்டும். வீண் கிளர்ச்சிகளில் காலம் போக்காமல் ஆக்கவேலைகளில் சக்தியை ஊக்கவேண்டும். அதற்கே இந்தப் பாட்டு எழுந்தது.

ஸர்வோதயப் பாட்டு

சிந்து பைரவி — ஆதிதாளம்

1. சாந்தக் கதிர் வீசும் — நல்ல
ஸர்வோதய சங்கம் — இது
காந்திக் குயிராகும் — பெருங்
கருணைப் பயிராகும்
ஸர்வோதய சங்கம் — புது
ஜீவோதய சங்கம் (சா)

2. ஏழை எளியவர்கள் — நாட்டில்
இன்னற் படு மக்கள்
வாழும் வகை செய்யும் — மன
வாட்டந் தவிர் சங்கம் (சா)

3. மடமை யிருள் போக்கும் — கல்வி
மல்கப் பணி செய்யும்
இடர்செய்பிணி போக்கும் — வறுமை
யில்லை என ஆக்கும் (சா)

4. ராட்டை ஓமொலிக்கத் — தறி
ராம் ராம் என ஓட
நாட்டுக் குடில்களெல்லாம் — தொழில்
நாதக் குழலிசைக்க (சா)

5. சூதும் வாதுமின்றி — கெட்ட
சுரண்டல் ஏதுமின்றி
போதும் வரை செல்வம் — எங்கும்
பொலியத் தரு சங்கம் (சா)

6. அளவுக் கதிகமாய்ப் — பணம்
ஆக்கும் தீமையெலாம்
களவுக் கதிகமென்றே — நிதம்
கண்டிக்கும் சங்கம் (சா)

7. இருப்போர் நிலம் வாங்கி — நிலம்
இல்லார்க் கீந்தருளி
உழைப்போர் நலம் பேணும் — இந்த
உலகுக் கொரு சங்கம் (சா)

8. வாரீர் எல்லாரும் — இது
வருக்கும் பணி செய்வோம்
சேரீர் ஒற்றுமையாய் — பாரத
தேசம் வாழ்கவென்றே — ஜய
ஜெயபாரதம் என்றே...

— சுத்தானந்த பாரதி
1—1—'52

* சமாஜத்தையே கவி சங்கம் என்று அழைக்கிறார்

சர்வ சேவா சங்கத்தின் தீர்மானங்கள்

(123-ம் பக்கத் தொடர்ச்சி)

இம் மாபெரும் வேள்வியில் தங்கள் முழுப் பங்கையும் செலுத்த வேண்டுமாய் சிறிய பெரிய நிலச்சுவான்தார்கள் அனைவரையும் சங்கம் வேண்டிக்கொள்கிறது."

"முக்கியமாய், மகாத்மா காந்தியால் ஆரம்பிக்கப்பெற்ற எல்லா நிர்மாண வேலை ஸ்தாபனங்களும், அவருடைய கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட தனிப்பட்டோரும் ஸ்தாபனங்களும், தங்கள் முழு சக்தியையும் சிரத்தையையும் கொண்டு இந்த வேள்வி துரிதமாகப் பெருகுவதற்கும் மக்களின் தார்மீக உணர்ச்சியைத் தூண்டி அமைதியான சமூகப் புரட்சியின் மூலம் சமத்துவத்தையும் சமாதானத்தையும் நிலைநிறுத்துவதற்கும் பாடுபட வேண்டுமாய் சங்கம் வேண்டிக் கொள்கிறது."

சமக்ர கிராம சேவைக்காக கிராம ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் ஒரு மூன்று வருஷ காலப் பயிற்சித் திட்டத்தையும் சங்கம் ஒப்புக்கொண்டது. ஊழியர்கள் இம்மூன்று வருஷங்களில் ஹிந்துஸ்தானி தாலிமி சங்கம், சர்க்கா சங்கம், கிராமக் கைத்தொழில் பகுதி, கிருஷி - கோ சேவைப் பகுதி ஆகியவற்றில் பயிற்சி பெறுவர். முதல் வருஷத்திற்கு தேசம் முழுதிலுமிருந்து 25 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். அதற்கு, பூர்வாங்கமாகப் பரீட்சை யொன்றும் நடைபெறும். பயிற்சி வரும் பிப்ரவரி மாதத்தில் தொடங்கும்.

கதர் - காந்தீய - ஸர்வோதய இலக்கியம்

தொகுப்பு நூல்	ரூ.அ.
1-3 கதர் மலர் தொ. I, II, III	0—8
4-5 புனர் நிர்மாணம் தொ. I, II	0—8

கதர் சாஸ்திரம்	ரூ.அ.
6 நூற்புக் கணிதம் பாகம் I	0—6
7 „ „ II	0—8
8 „ „ III	0-14
9 „ „ IV	1—0
10 நூற்புக் கலையின் நுணுக்கங்கள்	1—0
11 தக்ளியால் நூற்பதெப்படி?	0—8
12 கதர் உபகரணங்கள்	1—0
13 கைராட்டை	1—8
14 கிஸான்-[illegible]டி-சரிவு ராட்டை	1—0
15 நரம்பு செய்தல்	0—8
16 பட்டை போட சுலபவழி	0—4
17 பருத்திப் பிரசினை	0—6

தத்துவ நூல்கள்	ரூ.அ.
18 காந்தீய நவநீதம்	2—0
19 புதிய கதர் இயக்கம் (ஸ்டாக் இல்லை)	0-12
20 சர்க்காவும் அஹிம்சா சமுதாயமும்	1—0
21 சர்க்கா சங்க வேலைத்திட்டம்	0—8
22 சர்க்கா சங்க வரலாறு	1—0
23 சேவாகிராம முகாம்	1—0
24 ராட்டைப் புரட்சி	0—6
25 கதர் தத்துவமும் சேவையும்	0-12
26 விநோபா அறிவுரைகள்	0-12
27 „ பிரார்த்தனைப் பிரசங்கம்	0—8
28 ஸ்வராஜ்யமும் சர்க்காவும்	0—8
29 மலஜல சுத்தி	0—8
30 துப்புரவு விஞ்ஞானம்	0—8
31 சுயப்பூரண கிராமம்	0—5

காந்திஜி எழுதியவை	ரூ.அ.
32 ஸர்வோதயம்	0—6
33 சமூகத்தில் ஸ்திரீகளின் ஸ்தானம்	0—4
34 ஆசிரம வாழ்க்கை	1—4
35 நீதி தர்மம்	0—4
36 ராமநாமம்	0-12
37 ஆசிரம பஜனாவளி (தொகுப்பு)	0—6
38 ராட்டை - தத்துவ விளக்கம்	1—4

காந்திஜியைப் பற்றியவை	ரூ.அ.
39 பாப்பாவின் காந்தி	0-12
40 பாபு என் தாய்	0-10
41 எமது பாபு பாகம் I	1—4
42 „ „ II	1—4
43 காந்திக் காட்சிகள்	1—4
44 காந்திஜியின் குரல்	0—6

இதர நூல்கள்	ரூ.அ.
45 தன்னம்பிக்கை	0—8
46 புக்கர் வாஷிங்டன்	0—8

சிறு பிரசுரங்கள்	ரூ.அ.
47 தமிழ்நாட்டு விபாகங்கள்	0—2
48 கதாயி மண்டல்	0—2
49 விநோபாஜியின் ஸர்வோதய யாத்திரையும், பூமிதான யக்ஞமும்	0—2
50 சுயராஜ்யத்தின் உண்மைப் போர் பாகம் I	0—3
51 „ „ பாகம் II	0—3
52 இதென்ன சுயராஜ்யம்?	0—3

English Publications	
53 Revolutionary Charkha	0—6
54 Demand of the Times	0-12
55 New Programme of A. I. S. A.	0-10
56 Prayer for Peace	0—2
57 The Ideology of the Charkha	0-14

அறிவிப்பு

ரூபாய் 10-க்குக் குறையாமல் முன் பணத்துடன் ஆர்டர் இங்கு அனுப்புகிறவர்களுக்கு தபால் செலவு இல்லாமல் புத்தகங்கள் அனுப்பப்படும்.

THE KHADI WORLD

A Monthly English Digest devoted to the Science and Philosophy of Khadi, other Constructive Programme and Gandhian - Sarvodaya Ideology.

Started in July 1951.

Annual Subs : Rs. 3 Price: As. 4

ஸர்வோதய பிரசுராலயம், A. I. S. A., வீரபாண்டி, திருப்பூர்

கமலா பிரஸ், திருப்பூர்.